பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 07 | ஞாயிற்றுக்கிழமை | 21.01.2024 | கதிர் 75




தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

# மன்னார் தாழ்வுப்பாட்டிலுள்ள காணி ஒன்றிலிருந்து 24 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

மன்னார் தாழ்வுபாடு பகுதியில் உள்ள காணி ஒன்றில் இருந்து வியாழக்கிழமை ஒரு தொகுதி போதை மாத்திரைகள் மீட்கப்பட்டதோடு, சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் தாழ்வுபாடு பகுதியில் உள்ள காணி ஒன்றில் போதை மாத்திரைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன என தாழ்வுபாடு கடற்படைக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கடற்படையினருடன், தலைமன்னார் போதைப்பொருள் குற்றத்தடுப்பு பிரிவினர் இணைந்து குறித்த பகுதியில் உள்ள காணியை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போதுகுறித்தகாணியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 150 மில்லி கிராம் எடை கொண்ட 24 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதோடு, சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரும், மீட்கப்பட்ட போதைமாத்திரைகளும்மன்னார்பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைய நாட்களாக சட்டவிரோதமான முறையில் இந்தியாவில் இருந்து படகு மூலம் இலங்கைக்கு கடத்தப்படும் போதை மாத்திரைகள் விற்பனைக்காக மன்னாரில் உள்ள சில கிராமங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் நிலையில் பாதுகாப்பு துறையினரால் குறித்த போதை மாத்திரைகள் மீட்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# திருப்பதி ஏழுமலையானுக்கு முன்னேஸ்வரத்தில் ஆலயம்

இந்தியாவின் புகழ்பெற்ற திருத்தலங்களில் ஒன்றான திருப்பதி தேவஸ்தானத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இலங்கையிலும் ஏழுமலையான் கோயில் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

சிலாபம் - முன்னேஸ்வரம் ஆலயத்திற்கு அருகில் இந்தப் புதிய திருப்பதி ஏழுமலையான் கோவில் அமைக்கப்பட்டு, விரைவில் குடமுழுக்கு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆரம்பகட்டநடவடிக்கைகளுக்காகஇந்தியாவின்திருமலைதிருப்பதிதேவஸ்தான பிரமுகர்கள் உள்ளடங்கலான பிரதிநிதிகள்இலங்கைக்குவருகைதந்துள்ளனர்.

சனிக்கிழமை சிலாபம் -வந்த அவர்கள் முன்னேஸ்வரம் ஆலயத்திற்குரிய இடத்தை சென்று பார்வையிட்டார்கள். மிக விரைவில் ஆலயத்திற்கு உரிய பூமி பூஜை இடுவதற்கு திருவருள் கூடும் என அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் சாயி சமர்ப்பணம் அறக்கட்டளையின் பிரதானி ஜெகத் ராம்ஜி மற்றும் பி.செல்வராஜ் ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர்.

"இலங்கை- இந்திய நல்லுறவை மேம்படுத்தும்வகையில்இந்தியாவின் திருப்பதிதேவஸ்தானத்தின்உதவியுடன் புத்தளம் முனீஸ்வர ஆலயத்திற்கு அருகில் வெங்கடாஜலபதி ஆலயம் கட்டுவதற்குநடவடிக்கைஎடுக்கப்படும் வகையில்பூமிபூஜைபோடவுள்ளோம். விரைவாக ஆலயம் அமைக்கப்படும்" என்று அவர் தெரிவித்தார்.

# முன்னாள் கிராம உத்தியோகத்தர் களுத்துறையில் ரயில் மோதி சாவு

களுத்துறை - மக்கொன ரயில் நிலையத்திற்கு அருகில் ரயிலில் மோதி முன்னாள் கிராம உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மக்கொன பிரதேசத்தை சேர்ந்த 73 வயதுடையவராவார்.

அளுத்கமையில் இருந்து பொல்கஹவெல நோக்கி பயணித்த ரயிலில் மோதியே இவர் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர் களுத்துறை நாகொடை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (05)

# காசோலை மோசடிக் குற்றச்சாட்டில் யாழ். பெண்கள் உட்பட 6 பேர் கைது

காசோலையை மேசாடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 3 பெண்கள் உட்பட 6 பேர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15 மாணிக்கக் கற்களைக் கொள்வனவு செய்வதற்காகக் காசோலையை வழங்கி இவர்கள் மோசடியில் ஈடுபட்டனர் என்று பொலிஸார் குற்றங்சாட்டுகின்றனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஆண்களின் வயது 24, 30 மற்றும் 36 என்றும்இவர்கள்பேருவளை,யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்றும் பெண்கள் 25, 43 மற்றும் 53 வயதுடையவர்கள் என்றும் மூவருமே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்கள் 15 மாணிக்கக் கற்களை கொள்வனவு செய்து அதற்காக பெருந் தொகைப் பணத்தைக் காசோலை மூலம் வழங்கியுள்ளனர். ஆனால் வங்கியில் அந்தக் காசோலையை மாற்றப் பணம் இருக்கவில்லை. இதையடுத்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த 6 பேரையும் பண மோசடி குற்றச்சாட்டில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். சந்தேகநபர்களில் ஒருவர் கொழும்பு கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலும் ஏனைய சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் பிரதேசத்திலும் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊஞ்சல் கயிறு கழுத்தில் இறுக்கி 10 வயதுச் சிறுவன் பரிதாபச் சாவு

ஊஞ்சல் எமனாக மாறியதில் 10 வயதுச் சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்தான். இந்தச் சம்பவம் முல்லைத்தீவு மாவட்டம் செம்மலைப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த பிரசாத் தனேஷ் என்ற சிறுவனே இப்படிப் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

வீட்டில் கட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தபோது இந்த அவலம் இடம்பெற்றுள்ளதுஎன்றுஉறவினர்கள்தெரிவித்தனர். ஊஞ்சல் ஆடிக்கொண்டிருந்தபோது சிறுவன் கழுத்தில் ஊஞ்சல் கயிறு சுற்றி இறுகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கழுத்து இறுக்கி மூச்சுத் திணறிய சிறுவனை மீட்ட முல்லைத்தீவு உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அதற்கு முன்னரே சிறுவன் உயிரிழந்து விட்டதாக வைத்தியசாலையில் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.






# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 07 ஞாயிற்றுக்கிழமை 21.01.2024 கதிர் 75


# பாதாள உலகக் குழுவினருக்கு அமைச்சர் டிரான் எச்சரிக்கை

பாதாள உலகக் குழுவினர் தமது சட்டவிரோதச் செயற்பாடுகளை நிறுத்தாது விட்டால் இறக்க நேரிடும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு தெற்கு பொலிஸ் பிரிவின் சமூக பொலிஸ் குழுக்களைத்தெளிவூட்டும்வகையில் நேற்று கொழும்பு நெலும் பொக்குன கலையரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாம் போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனையாளர்களை இலக்கு வைத்து நடவக்கைகளை முன்னெடுத்து வருகின் ☞2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தேர்தலுக்கான பொதுக் குழுக்கூட்டம் திட்டமிட்டபடி திருகோணமலையில் மாநகர சபை மண்டபத்தில் காலை தொடங்குகின்றது. இந்தத் தேர்தலை நிறுத்துவதற்கும் தடுப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட எல்லா முயற்சிகளையும் தாண்டி தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கடைசி நேரத்தில் கட்சியின் பதில் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கத்தால் பொதுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு அதனை நடத்த முடியவில்லை. அவர் கடுமையாகச் சுகவீனமுற்றிருக்கிறார். நேற்று வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டதனால் இன்றைய கூட்டத்தில் அவரால் கலந்துகொள்ள முடியாது என்பது திட்டவட்டமாகி ☞2

# பொருளாதார மறுசீரமைப்பின் பயன் மக்களுக்குக் கிட்டுமாம்

எதிர்கட்சிகள் எவ்வகையான விமர்சனங்களை முன்வைத்தாலும் ஆளும் தரப்பு தற்போது முன்னெடுத்துவரும் புதிய பொருளாதார மறுசீரமைப்புக்களின் பயன்கள் எதிர்காலத்தில் மக்களுக்குகிடைக்குமென தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு தெற்கு பொலிஸ் ☞2

# இலங்கையர்கள் உட்பட 500 பேர் மலேசிய அதிகாரிகளால் கைது

மலேசிய தலைநகர் கோலாலப்பூருக்கு அருகில் பெரெனாங்பண்டார் தாசிக் கேசுமா என்ற இடத்தில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த இலங்கையர்கள் உட்பட வெளிநாடுகளைச் சேர்ந்த 560 பேரை மலேசிய குடிவரவு துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந்த அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளில் தங்கியிருந்த இந்த வெளிநாட்டவர்களிடம் ஆவணங்கள் இருக்கவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மலேசியாவில் சட்ட விரோதமாக தங்கியிருந்த இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், மியன்மார், நேபாளம், பாகிஸ்தான், இந்தோனேசியா, கம்போடியா, சியாராலோன் , கெமரூன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களை கூட்டு நடவடிக்கையின் மூலம் தாம் கைது செய்ததாக மலேசிய குடிவரவு துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றிரவு 11 மணியளவில் மேற்கொள்ளபட்ட இந்த நடடிக்கையின்போது 751 வெளிநாட்டினர்களிடம் சோதனை மேற்கொள்ளப்பட்டதாக மலேசிய குடிவரவு துறையின் பிரதான பணிப்பாளர் டத்தோ ருஸ்லின் ஜூசோ கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கையின்போது சில வெளிநாட்டினர் தப்பியோட முயற்சித்த போதிலும் அவர்களின் முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் பைடூரி அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் தங்கியிருந்த மக்களில் 80 வீதத்தினர் வெளிநாட்டினர் எனவும் ருஸ்லின் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனவரி 30 கொழும்பில் கடும் எதிர்ப்பு போராட்டம்

வற்வரி அதிகரிப்புக்கு எதிராக ஜனவரி 30 ஐக்கிய மக்கள் சக்தி பெரும் போராட்டம் ஒன்றைக் கொழும்பில் நடத்தத் தயாராகி வருகின்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதில் கட்சி உறுப்பினர்கள் பெரும் ஆர்வம் காட்டிவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வரி அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு, அரசின் இலாபம் தரும் நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பது, லஞ்சம், ஊழல், மோசடி மற்றும் மக்கள் மீதான அடக்குமுறைகள் என எல்லாவற்றையும் கண்டித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த ஆண்டு எப்படியும் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என்கிற நிலையில் அரசுக்கு எதிரான போராட் டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுப்பது என்றும் ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைபு முன்னையதிலிருந்து மாறுபட்டதல்ல

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கருத்து

பயங்கரவாதத்தடைச் சட்டத்திற்குப் பதிலாக, தற்போது இலங்கை நாடாளுமன்றத்தின் பரிசீலனையில் உள்ள, திருத்தப்பட்ட பயங்கரவாதத் எதிர்ப்புச் சட்ட மூலத்திற்கும் முன்னைய சட்டத்திற்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்குவது, உள்நாட்டுப் பாதுகாப்ப தொடர்பான ☞2

# முற்பதிவு கட்டணத்தை உயர்த்த நடவடிக்கை

நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில், முற்பதிவுகளுக்கான கட்டணங்களை அதிகரிப்பதற்கு தமது சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை விழா மண்டப மற்றும் உணவு விநியோகஸ்தர் சங்கத்தின் தலைவர் சாலிய ரவீந்திர தெரிவித்துள்ளார்.

வற் வரி அதிகரிப்பை அடுத்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,.

எதிர்வரும் நாட்களில் முற்பதிவுகளுக்கான கட்டணத்தை 10 சதவீதத்தால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது அனைத்து துறைகளின் பொருளாதார வளர்ச்சியும் 50 சதவீதத்தால் குறைவடைந்து செல்லும் நிலையே காணப்படுகிறது.

மரக்கறிகள் மாத்திரமின்றி அனைத்து உணவுப்பொருட்களின் விலைகளும் சடுதியாக அதிகரித்துள்ளதால், நட்டத்தை ஈடு செய்ய முடியாத நிலைமையே விழா மண்டப உரிமையாளர்களுக்கு உள்ளது.

திருமண மண்டபங்கள், விழாக்களுக்கான மண்டபங்கள் என்பனவற்றுக்கான உணவு விநியோகம் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்கும் தமது தொழில்சார் உறுப்பினர்கள் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளமையை கருத்திற்கொண்டு முற்பதிவுகளுக்கான கட்டணங்களை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டது என்றார்.

# நயினை நாகபூசனிக்கு ஜன. 24 குடமுழுக்கு



வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் குடமுழுக்குப் பெருவிழாவை முன்னிட்டு தீர்த்தக்கேணியில் இருந்து இன்றைய தினம் கும்பநீர் எடுத்துவரப்பட்டது

குடமுழுக்கை முன்னிட்டு பிரதிஷ்டா பூர்வாங்க கிரியைகள் 17.01.2024 அன்று பக்தி பூர்வமாக ஆரம்பமாகியதை தொடர்ந்து 18,19 ஆகிய தினங்களில் விஷேட, யாக, அபிஷேகங்கள் இடம் பெற்றிருந்தன.

இந்நிலையில், கும்பாபிஷேகத்திற்காக திருக்குடம் எடுத்துவரப்பட்டு திருக்குடமுழுக்கிற்காக பிரதான கும்பநீரானது கங்காதரணி தீர்த்தக் கேணியில் இருந்து எடுத்துவரும் சமய நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

புனராவர்த்தன அஷ்டபந்தன ஸ்வரண பந்தன உத்த மோத்தம த்ரயத்திரும்சமத் குண்டபக்ஷ மஹாயாக பிரதிஷ்டா குடமுழுக்கு ஜனவரி 24 அன்று காலை 09.38 முதல் 11.20 மணிவரை நடைபெறவுள்ளது.

21.01.2024 அன்று நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மனுக்கு உரிய தூபதீபம், யந்திர ஸ்தாபனங்கள், ☞2

# ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பெரமுனவுக்குள் கருத்து மோதல்

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்கள் மறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மற்றும் ஜோன்ஸன் பெர்னாண்டோ இடையே இவ்விதமான மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிக்கையில், ஜனாதிபதி தேர்தலில் பொது ஜன பெரமுனவின் ஆதரவு வேட்பாளர் நிறுத்தப் படுவார். பொது ஜன பெரமுன இன்னமும் கட்சியாக அது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கவில்லை, ☞2

# நிகழ்நிலை காப்பு சட்டமூலத்திற்கு 58 சர்வதேச அமைப்புகள் எதிர்ப்பு

உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்திற்கு 58 சர்வதேச சிவில் சமூக மற்றும் மனித உரிமைக் குழுக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. அவற்றில் ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கான குழுவும் அடக்கம். இது கருத்து சுதந்திரத்தை கடுமையாக கட்டுப்படுத்தக் கூடுமெனவும், ஜனநாயக விழுமியங்களுக்கு தீங்கு விளைவிக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளன.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் அவ்வமைப்புக்கள் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கான குழு உள்ளிட்ட 58 அமைப்புகள், உத்தேச நிகழ்நிலை சட்டமூலத்தை மீளப்பெறுமாறு கோருகின்றோம்.

அத்துடன், சிவில் சமூகம் மற்றும் மனித உரிமை நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரினதும் ஆலோசனைக்கு அமைய, அதனை தயாரிக்க வேண் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

உள்ளது.

முன்னதாக, செயலாளர் தனது உடல் நிலை கருதி, ஜனவரி 20 நடக்கவிருந்த கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தை நிறுத்திவிட்டு இன்றைய கூட்டத்தில் கலந்துகொள்வதற்கானஏற்பாடுகளில் இருந்தார். ஆனால் அவரது நோயின் தாக்கம் தீவிரமானதால் அவரால் இன்றைய கூட்டத்திலும் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து தன் சார்பில் செயலாளர் என்ற இடத்தில் இருந்து கட்சியின் பொதுக் குழுவை நடத்தி தேர்தலை முன்னெடுப்பதற்கு 8 பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்து, அந்தக் குழுவின் வசம் தனது அதிகாரங்களைக் கையளித்துள்ளார் சத்தியலிங்கம். வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களில் இருந்தும் ஒவ்வொரு பிரதிநிதிகளை எடுத்து பதில் செயலாளர் இந்தக் குழுவை நியமித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டம் சார்பில் குகதாசன், யாழ்ப்பாண மாவட்டம் சார்பில் கனகசபாவதி, கிளிநொச்சி மாவட்டம் சார்பில் குருகுலராஜா மன்னார் மாவட்டம் சார்பில் பரஞ்சோதி முல்லைத்தீவு மாவட்டம் சாந்தி சிறீஸ்கந்தராசா வவுனியா மாவட்டம் சார்பில் கருணாநிதி மட்டக்களப்பு மாவட்டம் சார்பில் சரவணபவன் அம்பாறை மாவட்டம் சார்பில் கோடீஸ்வரன் ஆகிய எண்மரும் பொதுக் குழுக் கூட்டத்தை நடத்தி தலைவரைத் தேர்வுசெய்வதற்கான அதிகாரமளிக்கப்பட்ட குழுவினராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இன்று இவர்கள் 8 பேர் முன்னிலையில் தேர்தல் நடத்தப்பட்டு கட்சியின் புதிய தலைவர் தெரிந்தெடுக்கப்படுவார். இருந்தாலும் கடைசி நேரத் திருப்பங்கள் உச்சக் கட்டக் காட்சிகள் என்று தமிழ்த் திரைப்படப் பாணியிலான விறுவிறுப்பு பொதுக் குழுக் கூட்டம் தொடர்பில் குறைந்ததாக இல்லை. அதற்குக் காரணம் தற்போதைய தலைவரும் தலைமை வேட்பாளர் ஒருவரும்தான்.

கட்சியின் பொதுக் குழுவிற்கு அங்கீகாரமளிக்கப்பட்டதன்படி 343 பேர் வாக்களிக்கும் தகுதியைப் பெற்றிருக்கின்றார்கள். அவர்கள் ஏற்கனவே நியமிக்கப் பட்டுவிட்டார்கள். அவற்றில் சில இரட்டை நியமனங்களும் இருப்பதால், அதாவது மத்திய குழுவில் உள்ளவர்களே தொகுதிக் கிளைகளின் சார்பிலும் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதால் இந்த எண்ணிக்கையில் சில குறையலாம். அதில் பிரச்சினை இல்லை. எப்படியும் பொதுக் குழுக் கூட்டத்திற்கு குறைந்தது 300க்கும் அதிகமானவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால், பிரச்சினை வேறு வடிவத்தில் கருக்கொள்வதாகத் தெரிகின்றது. தொகுதிக் கிளைகளில் இருந்து பலர் கடைசி வரை இருந்துவிட்டு நேற்று மாலை வரை தலைவரைத் தொடர்புகொண்டு தாமும் பொதுக் குழுக் கூட்டத்திற்கு வரப்போகிறார்கள் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். அதற்குத் தலைவரும் அதற்கென்ன, நீங்கள் எல்லோரும் நீண்டகாலமாக கட்சியில் இருக்கிறீர்கள் உங்கள் விருப்பத்தைஎப்படிமறுப்பது, பார்த்துச் செய்யலாம் என்று சொல்லிவருகின்றாராம்.

இப்படித் தலைவர் சொன்ன வார்த்தைகளை நம்பிப் பலர் இன்றையமத்தியகுழுக்கூட்டத்திற்கு செல்லத் தயாராகி வருகின்றார்கள் என்று தெரிகின்றது. அதில் இருக்கும் பிரச்சினை என்னவென்றால், மத்திய குழுவில் வாக்களிப்பதற்குத் தகுதியுடைய, ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலை பதில் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் தன்னால் நியமிக்கப்பட்ட 8 பேர் கொண்ட குழுவிடம் கையளித்துள்ளார். அந்தப் பட்டியலின்படி பெயர் விவரங்கள் சரிபார்க்கப்பட்டே மாநாட்டு மண்டபத்திற் குள் வாக்காளர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிகின்றது.

அப்படிப்பட்ட நிலையில் தலைவரின் கூற்றுக்களால் நம்பிக்கை பெற்று, ஏற்கனவே பொதுக் குழுக் கூட்டத்திற்குத் தெரிவு செய்யப்படாமல் இருப்பவர்கள் மண்டபஇடத்திற்குவருகைதந்தால் அதனால்ஒருகுழப்பம்ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அப்படிப்பட்ட ஒரு சூழல் ஏற்பட்டால் அதனையும் கையாள்வதற்கு ஏற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

மற்றையதுஇன்றுபொதுக்குழுக் கூட்டம் இடம்பெறும்போது, கடைசி நேரத்தில் இந்தப் போட்டியிலிருந்து தான் விலகிக் கொள்கிறார் என்று முக்கிய இரு வேட்பாளர்களில் ஒருவர் அறிவித்து மற்றையவரைத் தலைவராக்குவதன் மூலம் அடுத்த இரண்டு ஆண்டுக் காலத்திற்கான தலைவராகத்தான் பதவி வகிப்பதற்குரிய உத்தரவாதத்தை அந்த இடத்திலேயே பெற்றுக்கொள்வது என்று வேட்பாளர்களில் ஒருவர் நடத்திய மந்திராலோசனையில் ஆராயப்பட்டுள்ளதாகவும் தகவல். இப்படி தேர்தல் வாக்களிப்புத் தொடங்கும் கடைசித் தருணம் வரையில் விறுவிறுப்புக்குப் பஞ்சம் இல்லாத திரைக் கதையுடனேயே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுக் குழுக் கூட்டம் இன்று நடக்க இருக்கின்றது.

இதில் வெற்றிபெற்றுத் தலைவராகுபவர் ஜனவரி 27, 28இல் கட்சியின் தேசிய மாநாட்டைக் கூட்டி கட்சியின் ஏனைய நிர்வாகப் பதவிகளையும் தீர்மானங்களையும் அறிவிப்பார். இதற்கிடையில் அடுத்த செயலாளர் யார் என்பதற்கான சர்ச்சைகளும் தொடங்கி விட்டன. கட்சியின் பாரம்பரியப்படி தலைவர் வடக்கைச் சேர்ந்தவராக இருந்தால் செயலாளர் கிழக்கைச் சேர்ந்தவராக இருப்பதே வழக்கம். அதனடிப்படையில் மட்டக்களப்பைச் சேர்ந்த சிறீநேசனை செயலாளராக்கவேண்டும் என்று அரியநேத்திரன் ஒரு யோசனையை முன்வைத்துள்ளார். அதனை கட்சியின் மட்டக்களப்புக் கிளையின் தீர்மானம் என்பதைப் போன்று அரியநேந்திரன் முன்வைக்க முயன்றபோது, அது அவரது தனிப்பட்ட கருத்துமட்டுமே தவிர கட்சிக் கிளையின் முடிவு அல்ல என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குறிப்பிட்டுத் திருத்தினார் என்றும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இதற்கிடையில், நேற்று நான் இந்தப் பத்தியில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தேர்தல் தொடர்பில் எழுதியிருந்தவைகள் தொடர்பாக காலைக்கதிரின் ஆழமான வாசகரான ந.சதாசிவ ஐயர் ஒரு கருத்தை, எதிர்வினையை முன்வைத்துள்ளார். அதனையும் அப்படியே இங்கு முன்வைக்கிறேன். அது காலங்கடந்த விடயம்தான் என்கிறபோதும் அவரது எண்ணவோட்டத்தை பகிர்ந்து கொள்ளும் வகையில் அதனை இங்கு வாசர்களுக்காக அப்படியே தருகின்றேன்.

ஆசிரியர் ஐயா,

செல்வினின் கருத்தை வரவேற்கிறேன். ஆனால் யோகேஸ்வரன் தலைவரானால்...? தலவருக்குள்ள அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி யாவற்றையும் தலைகீழாக்கிவிட்டால்...? தற்காலிக தலைமைக்கு பொருத்தமானவர் சி.வி.கே. ஐயாதான். இக்கருத்தை நான் பலமுறை பலருக்கும் சொன்னேன். சாதரணான என்னை யார் பொருட்படுத்த போகிறார்கள்!

காலம் கடந்துவிட்டது. சிறீதரன் வந்தால் விக்கி ஐயாதான் பெருந்தலைவராவார். சுமந்திரன் வந்தால் தனியரசாக கட்டிவளர்க்கச் சந்தர்ப்பமுண்டு.

நல்லைக்கந்தன் தமிழரசே தனியரசாக அருளட்டும்.

ந.சதாசிவ ஐயர்.

இதுதான் அவர் அனுப்பியிருப்பது. இந்த யோசனைகளைச் செயற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றே சொல்லி விடலாம். இருந்தாலும் பரபரப்பான திருப்பங்களுக்குக் காத்திருக்கும் நிலையில் ஒருவேளை அப்படி எதுவும் நடந்தால் இந்த யோசனையும் கைகொடுக்கட்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பாதாள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றோம். இந்தத் தருணத்தில், திருடர்களைப் பிடிப்பதற்காக நாம் வேட்டை நாய்களை களமிறக்கியுள்ளோம்.

ஆனால், திருடர்களை எம்மை நிறுத்துவதற்காக சில நாய்களை தயார்ப்படுத்தி எமக்கு எதிராக உறுமுவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். நாம் அந்த நாய்களின் உறுமல்களுக்கு அடிபணிந்து அச்சமடையப்போவதில்லை.

அடுத் ஜூன் மாம் 30ஆம் திகதியாகின்றபோது இந்த நாட்டில் பாரிய மாற்றம் ஏற்பட வேண்டும் என்று நான் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுரை வழங்கியுள்ளேன். அதனைநோக்கிஎமது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதேநேரம், பாதாள உலகக் குழுவினர் தமது செயற்பாடுகளை முழுமையாக நிறுத்த வேண்டும் என்று நான் பல சந்தர்ப்பங்களில் எச்சரிக்கைகளை விடுத்துள்ளேன். அவ்வாறு அவர்கள் செய்வதற்கு தவறுகின்ற தருணத்தில் நிச்சயமாக மரணத்தினையே தழுவவேண்டிய நிலைமைக்கு தள்ளப்படுவார்கள் என்றார்.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவின் சமூக பொலிஸ் குழுக்களைத் தெளிவூட்டும் வகையில் நேற்று கொழும்பு நெலும் பொக்குன கலையரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு கொழும்பு தெற்கு பொலிஸ் பிரிவின் சமூக பொலிஸ் குழுக்களைத் தெளிவூட்டும் வகையில் நேற்று கொழும்பு நெலும் பொக்குன கலையரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் முன்னேற்றத்திற்குச் சட்டதையும் சமாதானத்தையும் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும். அதேபோல் முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உகந்த சூழலையும் உருவாக்க வேண்டும். எதிர்கால சந்ததியின் பாதுகாப்பிற்கும் சட்டமும் சமாதானமும் வலுவூட்டப்பட வேண்டியது அவசியமாகும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சட்டம், சமாதானம் தொடர்பிலான வெளிப்படைத் தன்மை காணப்படுகிறது. அதற்கு அவசியமான மூலதனம், மனித வளம், தொழில்நுட்பம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகிறது. நாம் அதே நிலைக்குச் செல்ல வேண்டும்.

பொருளாதாரம் சரிவடைந்து கிடந்த நிலையிலேயே நாம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டோம். இரு வருடங்களுக்கு முன்பு நாடு இருந்த நிலைமையை பலரும் மறந்துவிட்டனர். நாட்டுக்குள் எரிபொருள் வரிசை காணப்பட்டது. எரிவாயுவுக்கு வரிசை காணப்பட்டது. மருந்துப்பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவியது. ஆனால் இன்று நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

பொருளாதார ரீதியில் நெருக்கடிகள் இருந்தாலும் அடுத்த நாளை எவ்வாறு கடத்துவது என்ற கேள்விக்குரியான நிலைமை இல்லாமல் போயுள்ளது. தற்போது நிலைப்படுத்தப்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு எம்மை சார்ந்திருக்கிறது. அதற்கமைய முதல் இரு வருடங்களும் நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதற்காக செலவிடப்பட்டது. நாட்டு மக்களும் அதற்கு பெருமளவில் பங்களிப்பு செய்தனர். அந்த பயணத்தின் அடுத்த கட்டத்தையும் கவனமாகவே தொடர வேண்டும். நெருக்கடிகளை எதிர்கொண்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க ஆரம்பித்துள்ளோம். சரிவடைந்த விவசாயத்துறையை மீளகட்டியெழுப்பும் வகையில் உரக் கொள்கைளை மாற்றியுள்ளோம்.

இவ்வாறான பல்வேறு பொருளாதார மறுசீரமைப்புக்களை நாட்டுக்குள் முன்னெடுத்துள்ளோம். அன்று 5 சதவீதமாக இருந்த நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை 16 சதவீதமாக அதிகரிக்கும் இயலுமை கிட்டியுள்ளது.

சுற்றுலாத்துறையை நாம் இலகுவாக அபிவிருத்தி செய்யலாம். இன்றளவிலும் சுற்றுலாத்துறை முன்னேற்றமடைந்துள்ளது. 25 இலட்சம் சுற்றுலா பயணிகள் இவ்வருடத்தில் இலங்கைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலா அபிவிருத்திக்காக அன்று மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இன்று பலனளிக்கின்றன. அதனால் அந்நியச் செலாவணியும் அதிகமாக கிடைக்கிறது.

அதேபோல் துறைமுக அபிவிருத்தி, இறங்குதுறை மற்றும் இடைமாற்ற சேவைகளை அதிகரித்தல் ஆகியவற்றுக்கான திட்டங்களும் தயாரிக்கப்படுகின்றன. திட்டங்களுக்கு மேலாக நம்பிக்கையைப் பாதுகாக்க வேண்டிய அவசியமும் உள்ளது. கொழும்பு துறைமுகத்தின் இறங்குதுறைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

எமது நாட்டின் இளம் சமூகத்தினர் தொழில்நுட்பதுறையில் உயர்வான நிலையில் உள்ளனர். அதனூடான வெளிநாட்டு வருமானத்தைப் பெறுவதற்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்படுகிறன. எமது நாட்டுக்கும் இளைய சமுதாயத்தினருக்கும் சிறந்த எதிர்காலம் உள்ளது. ஆனால் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் மத்தியில் நம்பிக்கை இல்லாதபோது நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்பாடுகள் நாட்டுக்கு மிகவும் அவசியமாகும். நாடு மீண்டும் பொருளாதார சரிவைச் சந்திக்க இடமளிக்க கூடாது. எதிர்க்கட்சிகள் எவ்வகையான விமர்சனங்களை முன்வைத்தாலும் அரசாங்கம் முன்னெடுக்கும் பொருளாதார மறுசீரமைப்புக்கள், மக்களுக்கு பலனளிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. சர்வதேசத்திற்கு எமது நாடு தொடர்பிலான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அந்த நம்பிக்கையைப் பாதுகாக்கும் வகையில் நாட்டின் முன்னேற்றத்திற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியப்படுகிறது.

அதேபோல் நாடு முன்னேற்றம் அடையும் போது சமூகத்திலிருந்து போதைப்பொருள் ஒழிக்கப்பட வேண்டும். நாட்டின் முன்னேற்றத்தைப் பொறுப்பேற்க வேண்டிய இளம் சமூகத்தினர் போதைப் பொருள்பாவனையினால் அழிக்கப்படுகின்றனர். அதனை கண் முன்னே காண்கிறோம். அதற்காகவே 'யுக்திய' முன்னெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனை உலகத்தையே உலுக்குகிறது. அவற்றை ஒழிக்க வேண்டும். அதற்கும் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். போதைப்பொருள் ஒழிப்புக்காக பொலிசார் உள்ளிட்ட பாகாப்புத்தரப்பினர் அர்பணிப்புடன் செயற்படுகின்றனர்.' என்றார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதில்லை என்றும் தீர்மானிக்கவில்லை. ஆகவே இந்த விடயத்தில் வீணான குழப்பங்கள் அவசியமில்லை. எம்மைப் பொறுத்தவரையில் நாட்டை முறையாக வழிநடத்தக்கூடியவரும், பொருளாதார மீட்சியை முன்னெடுக்க கூடிய ஒருவருமே ஜனாதிபதியாகப் பொருத்தமானவர் என்றார்.

இதேவேளை, ஜோன்ஸன் பெர்னாண்டோ தெரிவிக்கையில், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் யாரைக் களமிறக்குவது என்பது தொடர்பில் கட்சியில் தீர்மானம் எடுக்கப்படவில்லை. பொருத்தமான தருணத்தில் கட்சி அதனைத் தீர்மானிக்கும். எவ்வாறாயினும் பொது ஜன பெரமுனவின் உறுப்பினரே வேட்பாளராக களமிறக்கப்படுவார் என்றார்.

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் அணுகுமுறையின் அர்த்தமுள்ள சீர்திருத்தத்திற்கான திருப்புமுனையாக இருக்க வேண்டும் என்று பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

முன்மொழியப்பட்ட சட்டமூலம், முன்னதாக இருந்த சட்டத்தை போலவே உள்ளது என்றும் அந்தப் பேரவை குறிப்பிட்டுள்ளது.

இது 'பயங்கரவாதத்தின்' செயல்களை பரந்த அளவில் வரையறுக்கிறது. குறிப்பாக குறிப்பாக தடுப்புக் காவல் உத்தரவுகளின் சட்டப்பூர்வமான சவால்கள் தொடர்பாக நீதித்துறை உத்தரவாதங்களின் வரம்பைக் கட்டுப்படுத்துவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.

அத்துடன் தடுப்புக்காவல் இடங்களை கண்காணிக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உரிமையும் இதன் ஊடாக மட்டுப்படுத்தப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் தற்போதைய வடிவில் நிறைவேற்றப்பட்டால், அவ்வாறான அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வதற்கு நிறைவேற்று அதிகாரத்திற்கு அதிக வாய்ப்புக்கள் வழங்கப்படும் என ஐ.நா மனித உரிமைகள் பேரவை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தசட்டமூலத்தைகணிசமான அளவில் திருத்தியமைத்து, அது இலங்கையின் சர்வதேச மனித உரிமைக்கடமைகளுக்கு முழுமையாக இணங்கும் வகையில், சிவில் சமூகம் மற்றும் ஏனைய தரப்பினருடன் அர்த்தமுள்ளவாறு தொடர்புபடும் வகையிலும், முன்வைக்குமாறு இலங்கை ஆளும் தரப்பிடம் கோருவதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.

## நயினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிவார மூர்த்திகள், பிரம்ஸ்தாபனம், அர்த்தபந்தண சாத்தல் இடம்பெற்று மறுநாள் 22.01.2024 அன்று காலை 07.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ள எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வு மறுநாள் 23.01.2024 மாலை 05.00 வரை இடம் பெற்று இனிதே நிறைவடையும்.

## நிகழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும்.

இந்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலம், குற்றங்கள் தொடர்பிலானஎதனையும் விட விரிவான அர்த்தப்படுத்தல், சுயாதீன மேற்பார்வை இன்மை, நிறைவேற்றதிகாரத்தின் தேவைக்காக பயன்படுத்தப்படும் அபாயம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

பொய்யான கருத்துகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் காணப்படும் தெளிவற்ற அர்த்தப்படுத்தலின் ஊடாக ஊடகதணிக்கை அமுல்படுத்தப்படும் சாத்தியம் காணப்படுகிறது.

அத்துடன், ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆணைக்குழுவிற்கு சட்ட மூலத்தினூடாக அதிக அதிகாரங்கள் வழங்கப்படுவதோடு அதனூடாக அரசியல்மயப்படுத்தல் இடம்பெறும் சாத்தியம் உள்ளது.

இணையவெளிபயனாளர்களின் அடையாளத்தைக் கோருவதனூடாக தனியுரிமை மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் சாத்தியம் உள்ளது. நாட்டில் வளர்ந்து வரும் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கும் தொழில் வாய்ப்புகளுக்கும் இதனூடாக பாதிப்பு ஏற்படும் சாத்தியம் உள்ளது என்றுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பாராட்டுக்குரிய தீர்ப்பு

அண்மையில் உயர் நீதிமன்றம் ஒரு முக்கியமான தீர்ப்பை வழங்கியிருக்கின்றது. கடந்த சில மாதங்களில் நீதிமன்றம் வழங்கிய முக்கியமான இரண்டாவது தீர்ப்பு இது.

உண்மை, உண்மைக்கு அப்பால் எதுவும் இருக்க முடியாது. நிறைவேற்று அரசுத் தலைவர் முறை தொடங்கப்பட்டதில் இருந்து, பல்வேறு நிறைவேற்று அரசுத் தலைவர்களும் தமது பதவிக் காலத்தில் – நீதித்துறையின் சுதந்திரத்தையும், நம்பிக்கையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடிய முடிவுகளை எடுத்துள்ளனர்.

முதல் நிறைவேற்று ஜனாதிபதியும் 1978 செப்டெம்பர் 5 அன்று தற்போதைய அரசமைப்பை உருவாக்கியவருமான மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜூலை 1981 இல், அவர் பிரபல பாதாள உலகக் குற்றவாளியும், பாலியல் குற்றவாளியுமான கோனாவல சுனிலை மன்னித்தார்.

அந்த ஜனாதிபதியின் காலத்தில் நடந்த மற்ற இரண்டு தலையீடுகளும் நினைவுக்கு வருகின்றன. முதலில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விவியென் குணவர்தனவின் அரசமைப்பு உரிமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றத்திற்காக பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு பதவி உயர்வு மற்றும் அபராதம் செலுத்துதல்.

இரண்டாவது சம்பவம், அப்போதைய தலைமை நீதிபதியின் இல்லத்தை அந்தக் கால ஆளும் தரப்பின் ஆதரவுடன் இருந்த குண்டர்கள் சுற்றி வளைத்து, போலீசார் சும்மா இருக்கும் போது, துஷ்பிரயோகம் மற்றும் கற்களை வீசி தாக்குதல் நடத்தியது ஆகியனவே அந்த இரு தலையீடுகளும்.

சில நாட்களுக்கு முன்பு, 17 ஜனவரி 2024 அன்று, உச்ச நீதிமன்றம் மீண்டும் ஒரு நல்ல தீர்ப்பு வந்தது, நமது வரலாற்றில் முதல் முறையாக அரசுத் தலைவரின் மன்னிப்பு செல்லாது என்று ஒரு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா தனது கையாட்களுடன் சேர்ந்து சாட்சி முன்னிலையில் அரசியல் எதிரி மற்றும் மூவரைக் கொன்றதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வழங்கிய மன்னிப்பை நாட்டின் உச்ச நீதிமன்றம் ரத்துச் செய்துள்ளது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு மன்னிப்பு வழங்கிய ராஜபக்சேவின் முடிவு தன்னிச்சையானது மற்றும் சட்டத்தில் செல்லாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஜனாதிபதியின் முடிவை நிலைநிறுத்துவதற்கு சட்ட அல்லது உண்மை அடிப்படைகள் எதுவும் இல்லை என்று தலைமை நீதிபதி கவனித்தார். அவர் தீர்மானம் தன்னிச்சையானது, பகுத்தறிவற்றது மற்றும் முன்னாள் ஜனாதிபதிக்கு மட்டுமே தெரிந்த காரணங்களுக்காக எடுக்கப்பட்டது என்றும் சாடினார்.

தண்டனை பெற்ற கொலையாளியை விடுதலை செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் பின்னணியில் உள்ள காரணம் தொடர்பான ஆவணங்களை வழங்க வேண்டிய அவசியம் போன்ற விடயங்களில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய கவலைப்படவில்லை.

'வியாழன் (கடவுள்) யாரை அழிக்க விரும்புகிறாரோ, அவர் முதலில் காரணத்தை இழக்கிறார்' என்ற ஒரு பண்டைய கிரேக்க பழமொழியின் உண்மையை இது நினைவூட்டுகிறது. ஒரு ஆணைப் பெண்ணாக மாற்றுவது அல்லது அதற்கு நேர்மாறாக மாற்றுவது தான் தன்னிடம் இல்லாத ஒரே சக்தி என்று மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் கூற்றை முன்னாள் ஜனாதிபதி நம்பத் தொடங்கியிருக்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, கொலையாளிகளுக்கு மன்னிப்பு வழங்கியது இது முதல் தடவையல்ல. நாட்டில் பல தசாப்தங்களாக நீடித்த உள்நாட்டுப் போரின்போது மிருசுவில் படுகொலைகள் நினைவுக்கு வரும் நிகழ்வு. இச்சம்பவம் 20 மார்கழி 2000 அன்று நிகழ்ந்தது. நான்கு குழந்தைகள் உட்பட எட்டு பேர் கைது செய்யப்பட்டு கழுத்துஅறுத்து கொலை செய்யப்பட்டதில் இராணுவ சார்ஜென்ட் ஒருவர் ஈடுபட்டார். 2015ஆம் ஆண்டு நடந்த கொலைகளில் அவர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டது.

பங்குனி 2020 இல், ஜனாதிபதி கோட்டாபய அந்தக் கொலைகார இராணுவ சார்ஜெண்டிற்கு மன்னிப்பு வழங்கினார். ரோயல் பார்க் கொலை வழக்கில் தண்டனை பெற்ற கொலையாளிக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னிப்பு வழங்கினார். இப்படிப் பல உதாரணங்கள் இருக்கின்றன. ஆனால் புதன் கிழமை வழங்கப்பட்ட தீர்ப்பு, இவை மற்றும் இதே போன்ற பிற வழக்குகள் அனைத்தையும் மீள் கேள்விக்குட்படுத்தும்.

முந்தைய சந்தர்ப்பத்தில், 2018 இல் இந்த நாட்டின் சட்டப்பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைப் பதவி நீக்கம் செய்யஅரசுத் தலைவர் இது சிறிசேன முயற்சித்தார். உச்ச நீதிமன்றம் ஜனாதிபதியின் முடிவை ரத்து செய்து, சட்டபூர்வமான அரசாங்கத்தை மீண்டும் நிறுவியது மற்றும் நாட்டில் அரசமைப்பு ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் ஆட்சியை நிலைநிறுத்தியது

அச்சுறுத்தல்கள் மற்றும் குறைபாடுகள் இருந்தபோதிலும், உயர் நீதிமன்றம் தைரியமாக சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தியது பாராட்டுக்குரியது. அதன் மூலம் மக்கள் மத்தியிலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பியுள்ளது.



# பொறுப்புக்கூறல் இல்லாத நல்லிணக்கம் சாத்தியமா?

**அம்பிகா சற்குணநாதன்**

இலங்கையில் ஆயுத மோதல்கள் முடிவடைந்து 2024 இல் பதினைந்து வருடங்கள் கடந்துவிட்டன. இருந்தும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமலேயே இருக்கின்றது. பல தசாப்தங்களாக மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்கள், அக்கறையற்ற அரசு மற்றும் இரக்கமற்ற ஆட்சியாளர்களால் சோர்வுற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்ந்தும் தமக்கான நீதியைக் கோரி வருகின்றனர்.

இலங்கை ஆட்சியாளர்களும், சர்வதேச சமூகமும் தமிழ்ச் சமூகத்திற்கு நீதிக்கு மாற்றாக 'நல்லிணக்கத்தை'யே வழங்குகின்றன. நிலைமாறுகால நீதிக்கான முன்முயற்சிகளின் இயல்பான விளைவாக வரும் நல்லிணக்கமல்ல இது. நீதிக்கு மாற்றான 'நல்லிணக்கம்'. அது எப்படி இருக்கும்? இந்தப் பதிலீட்டு நல்லிணக்கத்தின் ஊடாகச் சில உண்மைகள் வெளிப்பட்டாலும் அது தமிழருக்கான நீதி மறுக்கப்படும் நிலையையே குறிக்கின்றது. இது தென்னிலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகளையோ அல்லது பௌத்த மதகுருமார்களையோ கலக்கமடையச் செய்யாத தீர்வாக அமையும் என்பதுடன் ஆளும் தரப்புகள் எந்தவிதத்திலும் அரசியல் விலையைக் கொடுக்கும் சூழலை ஏற்படுத்தாது; விளைவுகளையும் ஏற்படுத்தாது.

பல தடவைகள் சுட்டிக்காட்டியபடி, தமிழர்களின் அரசியல் கோரிக்கைகளை நீர்த்துப்போகச் செய்வதற்கு அல்லது திசைதிருப்புவதற்கு வெவ்வேறு ஆட்சியாளர்களால் நல்லிணக்கம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. யஹபாலனயாவின் (நல்லாட்சி) போதுகூட, நல்லிணக்கம் என்பது நிலைமாறுகால நீதிச் செயல்முறையை அரசியலற்றதாக்குவதற்கும், தென்பகுதி மக்களுக்கு மிகவும் சுவையாகவும், குறைவான அச்சுறுத்தலாகவும் மாற்றுவதற்கும் பயன்படுத்தப்பட்டது.

2024 இல், ஐநா மனித உரிமைகள் பேரவை (UNHRC) தீர்மானத்தின் காலம் நிறைவுறுகிறது. அதைப் புதுப்பிப்பது தற்போதைய உலகளாவிய சூழலில் சவாலான காரியம். ஐநா மனித உரிமைகள் பேரவையின் இந்தச் செயல்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் எரிச்சலடைகிறார்கள். அது புரிந்துகொள்ளக்கூடியதே. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஐநா தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் முன்னேற்றத்தை ஆவணப்படுத்துகிறது; அதைப் பேரவைக்கு அறிக்கையிடுகின்றது. ஆனால் தீர்வுகளை வழங்குவதற்கான திறன் மற்றும் அரசின் நடவடிக்கைகளில் செல்வாக்கு செலுத்துவதற்கான திறன் அதற்கு வெகு குறைவாகவே உள்ளது.

இந்தத் தீர்மானம்கூட மீண்டும் புதுப்பிக்கப்படாமலோ அல்லது புதிய தீர்மானம் நிறைவேற்றப்படாமலோ இருப்பதை உறுதி செய்ய விரும்புவதாக ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். மோதல் தொடர்பான சிக்கல்களைத் தீர்க்கும் முயற்சியின் ஒரு பகுதியாக முன்வைக்கப்பட்ட இரண்டு முன்முயற்சிகளை ஒருவர் மதிப்பீடு செய்வதற்கான பூதக்கண்ணாடியாக இது அமைகின்றது.

நீங்கள் விரும்புவதைப் போலவே தொடங்கவும்: சூழல் மற்றும் செயல்முறை விடயம் உலகத் தமிழ் மன்றத்துடன் (GTF) இணைந்து சிறந்த இலங்கைக்கான சங்கம் (SBSL) முன்முயற்சியுடன், போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சங்கம் மற்றும் சுவிஸ் அரசின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்ட நல்லிணக்க முயற்சி இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சமூகத்தின் கோபத்தை சம்பாதித்துள்ளது. இந்த அமைப்புக்களால் முன்வைக்கப்பட்ட இமாலயப் பிரகடனத்தின் மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இமயமலைப்பிரகடனத்தில் முன்வைக்கப்பட்ட பரந்த, தெளிவற்ற கொள்கைகளில் போர்க்கால மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறல் வலியுறுத்தப்படாமை மற்றும் போருக்குப் பின்னரான நிலைமாறு கால நீதியின் தோல்வி போன்ற தமிழ் சமூகத்திற்கு முக்கியமான பிரச்சினைகள் இல்லாமை இந்தக் கடுமையான விமர்சனங்களுக்கான காரணமாக அமைந்துள்ளன.

இது ஒரு தேசிய உரையாடலின் ஆரம்பம் மட்டுமே என்றும், அடுத்த கட்டமாக நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கான விழிப்புணர்வை தொடர்ந்து பரப்புவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மதங்களுக்கு இடையேயான குழுக்களை அமைப்பது என்றும் கூறித் தனது நடவடிக்கையை நியாயப்படுத்துகிறது உலகத் தமிழர் பேரவை.

சமயங்களுக்கு இடையிலான நல்லிணக்க முயற்சிகள் இலங்கைக்கு புதிதல்ல. இத்தகைய முன்முயற்சிகள் சர்வதேச நன்கொடையாளர்களால் நிதியளிக்கப்பட்டு பல தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் பயனாக ஒரு சிறு நல்லிணக்க கட்டமைப்பு மட்டுமே உருவாக்கியுள்ளது. பல்வேறு காரணங்களால் இந்த முயற்சிகள் தோல்வியடைந்தன. சிங்கள பௌத்த பெரும்பான்மைவாதத்தின் தாக்கத்தை தமிழர்களும் முஸ்லிம்களும் சமூக பொருளாதார அரசியல் ரீதியில் தம்மைப் பாதிக்கும் காரணியாக இனங்காணுகின்றபோதிலும் சமூகங்களுக்கிடையிலான உறவுகளில் அதன் தாக்கத்தை நிவர்த்தி செய்வதை இந்த மத நல்லிணக்க முயற்சிகள் தவிர்ப்பது அதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

இந்து மற்றும் முஸ்லிம் வழிபாட்டுத் தலங்களை அழித்தல் போன்ற பெரும் பிரச்சினைகளில், நிகழ்வுகளில் இருக்கைகளை ஒதுக்குவதில் காட்டப்படும் நுண்ணிய செயல்களில், பௌத்த மதகுருமார்களுக்கும், சமயங்களுக்கு இடையேயான நல்லிணக்க முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பிற மதத்தினருக்கும் இடையே உள்ள சலுகைகளில் உள்ள வேறுபாடு வெளிப்படையானது. உதாரணமாக, நான் நேர்காணல் செய்த பௌத்த பிக்குகள் இனவெறியை ஒரு பிரச்சனையாக ஒப்புக்கொண்டனர், ஆனால் அதன் அமைப்பு ரீதியான தன்மையை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அதேபோன்று, இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்களை அவர்கள் அடையாளம் காணவில்லை, அல்லது சிங்கள பௌத்த இனவாதத்தின் இருப்பை அங்கீகரிக்கவில்லை. எந்தவொரு பௌத்த அமைப்பும் சிறுமைப்படுத்தப்படவோ அல்லது விளிம்பு நிலைக்குத் தள்ளப்படவோ இல்லை என்பதே அதற்குக் காரணம். இதற்கு மாறாக, ஏனைய மதங்களின் குருமார்கள் நாளாந்தம் சிங்கள பௌத்த பெரும்பான்மைவாத்தினால் கட்டமைக்கப்பட்ட இனவாதம் மற்றும் மதவெறியை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

இது சமூகங்களுக்கிடையிலான உரையாடல் தொடரவேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டுகிறது. ஆழமாக வேரூன்றியிருக்கும் தப்பெண்ணங்களை மாற்ற சமூக அணிதிரட்டல் தேவைப்படுகிறது. சில வாரங்கள் அல்லது மாதங்களில் இதைச் செய்ய முடியாது. பல ஆண்டுகள் ஆகும். நிதி இருக்கும் வரை ஒரு கிராமத்திற்குச் சென்று ஒருமுறை கூட்டம் நடத்துவதன் மூலமும் இதைச் செய்ய முடியாது. நிதி ஆதாரங்களை மட்டும் செலவழிக்காமல், தற்காலிக முயற்சிகளுக்கு அப்பாற்பட்ட நேரத்தையும் சக்தியையும் செலவழிக்கும் நம்பிக்கையின் உறவுகளை உருவாக்குவதே இதற்குத் தேவையான சக்தியாக இருக்கின்றது.

சமூகங்களுக்கிடையிலான இந்த உறவுகளை மீளக் கட்டியெழுப்புவதற்கான நீண்டகால முயற்சிகள், மனித உரிமை மீறல்களை நிறுத்துவதற்கு மிகக் குறைவாகவே பங்காற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, போர்க் காலத்தில் இடம்பெற்ற குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச போன்ற உயர் மட்டங்களில் தொடங்குவது சிறப்பானதாகவே இருக்கும்.

அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்களில் தான் ஈடுபடப் போவதில்லை என உலகத் தமிழர் பேரவை கூறியுள்ள நிலையில், மக்களுடன் கலந்துரையாடுவதற்கு முன் அரசியல்வாதிகளைச் சந்தித்து இந்த முயற்சியை அரசியலாக்குவது சிறு அளவிலாயினும் பயன் தரக்கூடியது. மிகவும் சுவாரசியமான கேள்வி என்னவென்றால், இலங்கையின் கடந்த கால மற்றும் தற்போதைய மனித உரிமை மீறல்கள், சர்வதேச மற்றும் உள்ளூர் சட்ட மீறல்கள் தொடர்பான சர்வதேச இறுக்கத்தின் கீழ் இலங்கையை தொடர்ந்தும் வைத்திருக்கவே தான் விரும்புவதாக உலகத் தமிழர் பேரவை கூறியுள்ள நிலையில், இந்த உரிமை மீறல்களுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களைச் சந்திக்கும்போது அதை எப்படிச் செய்யும் என்கிற கேள்விதான்?

(6ஆம் பக்கம் பார்க்க...)

# பொறுப்புக்கூறல் இல்லாத ............

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பாக, 2024 இல் ஐநா மனித உரிமைகள் பேரவையின் முக்கியமான அமர்வுகளுக்கு முன்னதாக உலகத் தமிழர் பேரவை இந்த நல்லிணக்க முயற்சியை பகிரங்கமாகத் தொடங்கும்போது, அது கூறும் தொடர்ச்சியான சர்வதேச இறுக்கத்திற்கு எதிரான ஆயுதமாக இந்த நல்லிணக்க முயற்சிகளையே இலங்கை பயன்படுத்தும் வாய்ப்புள்ள நிலையில், உலகத் தமிழர் பேரவை என்ன செய்யும் என்பதுதான் சுவாரஸியமானது.

தமது நல்லிணக்கச் செயற்பாடுகளில் இருந்து பாதிக்கப்பட்டவர்களையும், தமிழ் சமூகத்தின் பெரும்பகுதியையும் உலகத் தமிழர் பேரவையும் சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பும் ஒதுக்கிவைத்துள்ளமையானது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சமூகம் மத்தியில் இயல்பாகவே சந்தேகத்தை உருவாக்கியுள்ளது. வெளிப்படைத் தன்மை இல்லாமையே இந்தச் சந்தேகத்திற்குக் காரணம். இந்த முயற்சியின் தோற்றம் மற்றும் இயக்கிகள் பற்றிய விவரங்கள், இரு தரப்பினருக்கும் இடையில் ஏதேனும் உடன்பாடுகள் எட்டப்பட்டதா என்பதற்கான விடை, இந்த ஒப்பந்தங்கள் எவ்வாறு சமூகத்தின் கோரிக்கைகளுடன் இணங்கக்கூடும் என்பதற்கான பதில் அல்லது எவ்வாறு பொருந்தாமல் போகலாம் என்பதற்கான பதில் எதுவும் தமிழ் சமூகத்திற்குத் தெரியவில்லை. இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள பௌத்த மதகுருமார்களின் முன்முயற்சியை அங்கீகரிப்பது அல்லது விளக்குவது போன்ற அறிக்கைகள் குறிப்பிடத்தக்க வகையில் இல்லாததால் அவர்களின் மேலான சந்தேகங்களும் அதிகரித்துள்ளன.

மதங்களுக்கு இடையிலான இந்த நல்லிணக்க முயற்சிகள் சகவாழ்வைச் செயல்படுத்துவதில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும், ஆனால் சமூக மாற்றத்தை உண்டாக்குவதில் சிவில் பொறிமுறைகள் மற்றும் சமூகத் தலைவர்களைவிட மத நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிப்பதென்பது அக்கறைக்குரியது. மதக் கோட்பாடு, குறிப்பாக நடைமுறையில் அதன் விளக்கம், பழமைவாதமானது மற்றும் பெரும்பான்மையில் தங்கி உள்ளது. அது முற்போக்கான மதிப்புகளுக்கு எதிராக இயங்குகின்றது என்பதே இதற்குக் காரணம்.

சில நாட்களுக்கு முன்னர் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச கருத்துத் தெரிவித்தபோது, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை வளர்ப்பதையும் சகவாழ்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட உண்மை ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆதரவளிக்குமாறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால், கடந்தகால ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படாத நிலையில் அந்தப் புதைகுழியைக் கடந்து சென்ற பாதிக்கப்பட்டவர்கள் அமைச்சரின் முயற்சியில் சந்தேகம் கொண்டுள்ளனர் ஆனால் பெருந்தன்மையுடன் அந்த முயற்சியை நிராகரிக்கவில்லை. மாறாக, கடந்த கால ஆணைக்குழுக்கிளின் வழியில் இந்த ஆணைக்குழு செல்லாது என்பதை நிரூபிக்கத்தக்கதாக நம்பிக்கை கட்டியெழுப்பப்படவேண்டும் என்று கேட்கின்றனர். அவர்களின் கோரிக்கைகளை புறக்கணித்துள்ள ஆளும் தரப்பு அந்த ஆணைக்குழுவை நிறுவுவதற்கான தடைகள் அனைத்தையும் துவம்சம் செய்து முன்னேறுகின்றது.

கடந்த கால ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் நிறைய உண்மைகள் இருக்கின்றன. அவை பயனில்லாது போனமை உண்மையின்மையால் அல்ல, மாறாக அரசியல் விருப்பமின்மையால். எனவே, அரசு தான் தனது நல்லெண்ணத்தை அர்த்தமுள்ள, அடிப்படையான நடவடிக்கை மூலம் வெளிப்படுத்த வேண்டும். உதாரணமாக, ஐநா மனித உரிமைகள் தீர்மானத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட, போர்க்குற்ற ஆதாரங்களைச் சேகரிக்கும் பொறிமுறையான இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை அரசு இலங்கைக்கு அழைக்க முடியும். இது, சிவில் சமூகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், ஊடகங்கள் மற்றும் வடக்கு கிழக்கில் உள்ள முன்னாள் போராளிகள் மீதான படையினரின் கண்காணிப்பை நிறுத்த உதவும். இராணுவ முகாம்களை விரிவுபடுத்தவும், இந்து மற்றும் முஸ்லிம் வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படுவதைத் தடுக்கவும் நிலம் கையகப்படுத்துவதை நிறுத்தவும் உதவும்.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சிவில் சமூகத்தினால் வெளியிடப்பட்ட நான்கு அறிக்கைகளில் ஒன்று, உத்தேச உண்மை ஆணைக்குழு பற்றிய தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது. கடந்த நான்கு தசாப்தங்களாக வடக்கு கிழக்கில் இருந்த இராணுவ முகாம்கள் மற்றும் அவற்றின் கட்டளை அதிகாரிகளின் பட்டியலை அரசு பகிரங்கப்படுத்தவேண்டும் என்று அந்த அறிக்கை கோரியிருந்தது. அந்த அறிக்கையின் கோரிக்கைகள் அனைத்துமே நியாயமானவை. ஆனால் அதில் ஒரேயொரு கோரிக்கையைக்கூட நிறைவேற்ற ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை.

அரசு நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று கோருவதற்குப் பதிலாக, ஆட்சியாளர்களினால் முன்மொழியப்பட்ட உண்மை ஆணைக்குழுவை அங்கீகரிப்பது போன்ற சில சிவில் சமூக அமைப்புகளின் நடவடிக்கைகள் மிகவும் வருத்தமளிக்கின்றன. அதிலுள்ள ஆழமான அக்கறை என்னவென்றால், உத்தேச உண்மை ஆணைக்குழு தொடர்பாக அரசிடம் நியாயமான கேள்விகளை முன்வைப்பவர்கள் மற்றும் உலகத் தமிழர் பேரவையின் செயல்முறையின் குறைபாடுகளை விமர்சிப்பவர்கள் கெடுபிடிகள் என்று தெற்கில் உள்ள இந்த சிவில் சமூக அமைப்புகள் சுட்டிக்காட்ட முற்படுவதுதான்.

பல தசாப்தங்களாக அரசியல் விருப்பமின்மையை மட்டுமே கண்டு வரும் பாதிக்கப்பட்டவர்கள், ஆட்சியாளர்களின் பேச்சுக்களை உடனடியாக ஏற்று அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைப்பது சாத்தியமல்ல. சிங்கள பௌத்த பெரும்பான்மைவாதம் போன்ற இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்களை ஒப்புக்கொள்ள மறுத்து, உடன்படிக்கைகளில் இருந்து விலகிய ஆட்சியாளர்களிடமிருந்து இதை எதிர்பார்ப்பது நியாயமற்றது. குறிப்பாக தென்னிலங்கையில் உள்ள சிவில் சமூக அமைப்புகள் தமிழ் சமூகம் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் பற்றி பேசாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் கவலைகளை நிராகரிக்கவோ, அவர்களுக்காக பேச முயற்சிக்கவோ அல்லது அவர்களின் விமர்சனங்கள் மற்றும் கவலைகளை 'ஆட்சி மற்றும் குறுகிய அரசியல் நலன்கள்' என்று முத்திரை குத்தி அவர்களை இழிவுபடுத்தவோ முயற்சிக்கக்கூடாது. அது நட்பு, மனித உரிமை செயற்பாடு அல்லது சமாதானத்தை கட்டியெழுப்புவது அல்ல, மாறாக அவர்களின் குரல்களையும், அவர்களை மௌனமாக்குவதற்கான இடங்களையும் கையகப்படுத்துவது.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-

பரப்பு 25 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



காலைக்கதிர் Kalaikkathir

# மேல்மாகாணத்தில் வெள்ள நிலையை கட்டுப்படுத்த 6 முக்கிய திட்டங்கள்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



மேல் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் 2,482 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. மேல் மாகாணத்தில் பிரதான வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அந்த ஏற்பாடுகளை பயன்படுத்தி மேல் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமையை கட்டுப்படுத்த 6 பிரதான திட்டங்களின் பணிகள் முன்னெடுக்கப்பட உள்ளன என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி இவ்வருடம் பெரிய கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 292 மில்லியன் ரூபாவாகும்.

இந்தத் திட்டம் 2012 ஆம் ஆண்டு உலக வங்கியின் உதவியுடன் மற்றும் உள்ளூர் நிதியுடன் கொழும்பில் வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட பணத்தில் நொரிஸ் கால்வாய் உப திட்டத்தின் மீதமுள்ள பணிகளும், ஒருங்கிணைந்த மழைநீர் முகாமைத்துவ அமைப்பின் மீதமுள்ள பணிகளும் முடிக்கப்பட உள்ளன.

இத்திட்டத்தின் கீழ் அம்பத்தளை நீரேற்று நிலையம், மாதிவெல கிழக்கு வளைவு, டொரிங்டன் சுரங்கப்பாதை அபிவிருத்தி உள்ளிட்ட 54 உப திட்டங்கள் கடந்த வருடம் அபிவிருத்தி செய்யப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டன என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த வருட வரவு செலவு திட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி திட்டத்திற்காக 600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கொழும்பை சுற்றி தற்போதுள்ள கால்வாய்கள், ஏரிகள் மற்றும் நடைபாதைகளை பராமரித்தல் மற்றும் புனரமைத்தல், ஈர நிலங்கள் மற்றும் தாழ்நிலங்களை அபிவிருத்தி செய்தல் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. களு ஓயா மழைநீர் வடிகால் மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுத் திட்டமும் இதன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

வெரஸ் கங்கை வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு திட்டத்திற்கு 800 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நுகேகொட ரத்தனபிட்டிய கால்வாய், தெல்கந்த கால்வாய், பொரலஸ்கமுவ வடக்கு, பொரலஸ்கமுவ தெற்கு மற்றும் வெரஸ் ஆறு ஆகிய 5 வலயங்கள் இத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டம் 55.5 கிலோமீற்றர் தூரத்தை உள்ளடக்கும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டுகிறார். மழைநீர் தேங்கும் பகுதிகளைப் பாதுகாப்பதன் மூலம் சுற்றுச் சூழல் சுற்றுலாவை மேம்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தவிர கொலன்னாவ மழை நீர் வடிகால் மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு திட்டத்திற்கு 300 மில்லியன் ரூபாவும் ஒலியமுல்ல மழை நீர் வடிகால் மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு திட்டத்திற்கு 450 மில்லியன் ரூபாவும் இவ்வருட வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன.

கொலன்னாவ திட்டம் கித்தம்பஹூவ கால்வாய், சலலிஹினி மாவத்தை கால்வாய் மற்றும் களனி கங்கை இணைக்கும் தாது தொட்ட கால்வாய் ஆகியவற்றைச் சுற்றியுள்ள பகுதியை உள்ளடக்கியது.

ஒலியமுல்லை திட்டம் களனி மற்றும் வத்தளை பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாகக் கூறிய அமைச்சர், அப்பிரதேசங்களில் வெள்ளத் தணிப்பு மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் பேர ஏரித் திட்டத்திற்காக இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை 40 மில்லியன் ரூபாவாகும்.

கொழும்பு நகரில் அமைந்துள்ள பேர ஏரி மாநகர மற்றும் தொழிற்சாலை கழிவுகள் மற்றும் கழிவுநீர் தேங்கியுள்ளதால் பாழடைந்துள்ளது.

எனவே மேலும் சுற்றுச்சூழல் பாதிப்பை குறைக்கும் நோக்கில் இந்த திட்டம் தொடங்கப்பட்டது. பேரா ஏரியின் நீரின் தரத்தை மேம்படுத்துதல், சுற்றாடலை அழகுபடுத்துதல் மற்றும் மக்களின் சுகாதார மேம்பாடு என்பன மேற்கொள்ளப்படும் என பிரசன்ன ரணதுங்க குறிப்பிடுகின்றார். (05)

# நாட்டு மக்கள் எனக்காக செலவு செய்தால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தயார்

## இப்படிக் கூறுகின்றார் குமார வெல்கம



தேர்தல் பிரசாரத்துக்கு நாட்டு மக்கள் செலவு செய்தால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட நானும் தயார்.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் தோல்வியடைவார் என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும்.

நிவாரணம் வழங்கி வாக்குகளை பெறும் காலம் முடிவடைந்து விட்டது என நல லங்கா நிதாஸ் பக்சய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம தெரிவித்தார்.

களுத்துறை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தீர்மானமிக்கதாகும். தேர்தலுக்கு நானும் தயார் என்று பலர் தற்போது களமிறங்கியுள்ளார்கள்.

தொழிலதிபர்களும் களமிறங்கியுள்ளார்கள்.அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒருவர் ஜனாதிபதியாகினால் எவ்வாறான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதற்கு கோட்டாபய ராஜபக்ச சிறந்த எடுத்துக்காட்டு.

அரச தலைவர் பதவிக்கு கோட்டாபய ராஜபக்ச தகுதியற்றவர் என்பதை நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். எனது கருத்தை நாட்டு மக்கள் பொருட்படுத்தவில்லை.

2 ஆண்டுகளுக்கு பின்னர் தவறான அரசியல் தீர்மானத்தை உணர்ந்து கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டியடித்தார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தகுதி எனக்கும் உள்ளது. தேர்தல் பிரசாரத்துக்கு நாட்டு மக்கள் செலவு செய்தால் தேர்தலில் போட்டியிட நான் தயார். இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைவார் என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும். ஆளும் தரப்பால் களமிறக்கப்படும் வேட்பாளர் படுதோல்வியடைவார்.

தேர்தலை இலக்காகக் கொண்டு அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிவாரணம் வழங்கி வாக்குகளை பெறும் காலம் முடிவடைந்து விட்டது என்பதை ஜனாதிபதி உட்பட அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும். - என்றார். (05)

# இரவு நேரங்களில் வீடுகளை உடைத்து கொள்ளையிட்டவர் சீதுவையில் கைது

இரவு நேரங்களில் பல வீடுகளை உடைத்து கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபராவார்.

மேல்மாகாண தெற்கு குற்றப் புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் சந்தேக நபர் சீதுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து 20 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் , தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு வீடுகளை உடைத்து 12,000 ரூபா பணமும் 6 பவுண் நகைகளும் , பம்பலப்பிட்டி பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் அறையிலிருந்து 4,000 ரூபா பணமும் இரு ஏ.ரி.எம் அட்டைகளையும் திருடி 646,000 ரூபாவையும் திருடியுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இவருக்கு எதிராக கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட வழக்குகள் தொடர்பில் 5 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரியவந்துள்ளது. சந்தேக நபரிடத்திலிருந்து 65 கிராம் 418 மில்லிகிராம் நிறையுடைய உருக்கிய தங்கங்கள் , 8 பவுண் 440 மில்லிகிராம் நிறையுடைய 2 தங்க மோதிரங்கள், மாணிக்கக் கல் மற்றும் 24 வைரக்கற்கள் கைப் பற்றப்பட்டுள்ளன. (05)

# இணையத்தள முதலீடு எனக்கூறி பண மோசடி செய்த நவர் கைது

இணையத்தில் பணம் முதலீடு செய்வதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட ஒருவர் கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் பதுளை பிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடையவராவார்.

கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் இணையத்தளம் மூலமாக பணம் முதலீடு செய்வதாக கூறி தனிப்பட்ட வங்கி கணக்கில் மக்களின் பணத்தை வைப்பு செய்து 16 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவை மோசடி செய்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பிரபல ஐஸ் வியாபாரி உட்பட மூவர் போதைப்பொருள்களுடன் கைது

## காத்தான்குடியில் சம்பவம்

காத்தான்குடி பிரதேசத்தில் ஐஸ் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பிரபல ஐஸ் வியாபாரி ஒருவரை ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஜி. கஜநாயக்க தெரிவித்தார்.

புதிய காத்தான்குடி பிரதேசத்தில் உள்ள வாகனம் திருத்துமிடம் ஒன்றில் வைத்து குறித்த ஐஸ் வியாபாரி இரண்டு கிராம் 110 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸாரிடம் சிக்கியுள்ளார்.

அதே நேரம் காத்தான்குடி அலியார் சந்தியில் வைத்து இரண்டு கிராம் 45 மில்லிகிராம் போதை பொருளுடன் 29 வயது நபர் ஒருவரும் உள்ள வீதியில் வைத்து 190 மில்லிகிராம் அபினுடன் 54 வயது நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வாகனம் திருத்தும் இடத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ள ஐஸ் வியாபாரியை தடுத்து வைத்து விசாரணை செய்யுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அதே நேரம் ஏனையவர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

# மாலைதீவு - இலங்கையில் 'ஹெபடைடிஸ் பி' கட்டுக்குள்

மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் 'ஹெபடைடிஸ் பி' நோயை கட்டுப்படுத்தியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

இரண்டு நாடுகளும் அதிகளவான குழந்தைகளுக்கு ஹெபடைடிஸ் பி தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளமை மற்றும் நோயால் குறைந்தளவிலானோர் பாதிக்கப்பட்டுள்ளமை அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

'சுகாதாரத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் இந்த நாட்டு மக்கள் சமூகங்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்காக மேற்கொள்ளும் தீவிர முயற்சிகளை மீண்டும் ஒருமுறை நிரூபிக்கும் வகையில், மாலைதீவு மற்றும் இலங்கையின் சாதனைக்கு நான் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.' என உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்கு ஆசிய பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் பூனம் கேத்ரபால் சிங் தெரிவித்துள்ளார்.

ஹெப்படைடிஸ் பி என்பது ஹெப்படைடிஸ் பி வைரஸால் ஏற்படும் தொற்றுநோய் ஆகும். இது கல்லீரலைப் பாதிக்கிறது மற்றும் கடுமையான (குறுகிய கால) அல்லது நாள்பட்ட (நீண்ட கால) நோயை ஏற்படுத்தலாம். குழந்தைகளிடையே நீண்டகால தொற்றுநோயை உருவாக்கும் ஆபத்து அதிகமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# யாழில் 12 லீற்றர் சட்ட விரோத மதுபானத்துடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணத்தில் 12 லீற்றர் சட்டவிரோத மதுபானத்துடன் நபர் ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொலிஸாருக்கு கிடைக்கபெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் ஆனைக்கோட்டை பகுதியில் உள்ள வீடொன்றில் சோதனையிட்ட போது, விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மதுபானத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அதையடுத்து வீட்டில் இருந்த 53 வயதுடைய நபரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர். (05)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

# ஒருபுறம் கலைநிகழ்ச்சிகளை காண்பித்தவாறு மறுபுறம் திருமலையில் சொத்துகள் விற்பனை

## அருண் ஹேமசந்திரா வருத்தம்

ஒருபுறம் கலைநிகழ்ச்சிகளைக் காண்பித்தவாறு மறுபுறம் திரு கோணமலையின் சொத்துக்களை விற்கிறார்கள் என தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் மற்றும் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச் சந்திரா தெரிவித்தார்.

18 சதவீத வற் வரிக்கு எதிராக மூதூரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தின்போது கருத்து வெளியிடுகையிலேயே அருண் ஹேமச்சந்திரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒருபுறம் பொங்கல் பண்டிகை, கலை நிகழ்ச்சிகள் என்று வெளி உலகுக்குக் காண்பித்துக் கொண்டு மறுபுறத்தில் திருகோணமலையின் வளங்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் விற்பனை செய்யும் வேலைத்திட் டத்தில் இறங்கியிருக்கிறது.

இலங்கையில்பெறுமதிமிக்கவளங்களை கொண்ட மாவட்டமாக திரு கோணமலை மாவட்டம் இருக்கிறது.

ஆனால்,இங்குள்ளசொத்துக்கள்குறைந்த விலைக்கு அந்நியர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதை திசைதிருப்பும் முகமாகப் பல்வேறு கொண்டாட்ட வைபவங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. ஆக, இவ்வாறு எமது வளங்களை அந்நியருக்கு தாரைவார்ப்பதை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும். -என்றார். (05)

# வெளிநாடுகளில் இருந்து திரும்பிய பெண்களிடம் மோசடி செய்த நபர்

## பொலிஸாரால் கைது



வெளிநாடுகளில் வேலை செய்துவிட்டு நாடு திரும்பிய பெண்களின்வீடுகளுக்குவெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரியாக பாவனை செய்து பண மோசடியில் ஈடுபட்டார் எனக்; கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் கண்டி - ஹதரலியத்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நாடு திரும்பிய பெண்களிடம் அவர்களது காப்பீடு பணம் காலாவதியாகியுள்ளதாகவும் அவ்வாறு காலாவதியான பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பணம் செலுத்த வேண்டும் எனவும் கூறி அவர்களிடம் இருந்து பணம் பெற்று மோசடி செய்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி - ஹதரலியத்த பொலி ஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (05)






காலைக்கதிர்
Kalaikkathir

# சிறந்த உலகை படைக்க பலமான அணிசேரா அமைப்பு வேண்டும்

## கம்பாலாவில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு




டிஜிட்டல் பிரிவினை மற்றும் பெரும் அழிவுக்கு வழிவகுக்கும் ஆயுதங்கள் வாயிலாக, அணிசேரா அமைப்பில் அங்கம் வகிக்கும் உலகின் அபிவிருத்தி அடைந்துவரும் மற்றும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் மத்தியில் பெரும் சமநிலை அற்ற தன்மை உருவாகியுள்ளது என்றும் அதனால் சிறந்த உலகை உருவாக்கவலுவானமற்றும்ஒன்றிணைந்தஅணிசேரா அமைப்பின் ஊடாக மேற்படி பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வை எட்ட வேண்டும் என்றும் ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

உகண்டா - கம்பாலா நகரில் 'உலக சுபீட்சத்துக்காக ஒன்றிணைந்த ஒத்துழைப்புக்களை மேலும் பலப்படுத்திக்கொள்ளல்' என்ற தொனிப்பொருளின் கீழ் வெள்ளிக்கிழமை தொடங்கிய அணிசேரா அமைப்பின் 19ஆவது அரச தலைவர்கள் மாநாட்டில் உரையாற் றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அணிசேரா நாடுகளின் 19 மாநாட்டிற்கு தலைமை ஏற்றுள்ளமைக்காக உகண்டா ஜனாதிபதி யொரேவி முசேவேனிக்கு பாராட்டு தெரிவிக்கிறேன். தென்துருவ நாடுகளுக்கிடையில் பொது தெரிவுகள் காணப்பட்ட வேண்டிய தீர்மானமிக்க தருணத்தில் உகண்டா அதற்கான களத்தின் தலைமைத்துவத்தை ஏற்றுள்ளமை காலோசிதமானதாகும்.

தொற்றுநோய் பரவல், கடன் சுமை, காலநிலை அனர்த்தங்கள், புதிய உலகளாவிய போட்டிகள் ம ற்றும் உலக நாடுகளும் தென் துருவமும் எதிர்கொண்ட பல்வேறு அழுத்தங்களின் பின்னர் நடத்தப்படும் முதலாவது அணிசேரா நாடுகளின் மாநாடு இதுவாகும்.

நாம் இங்கு சந்திக்கும் வேளையில் காஸா பகுதிகளிலும் அதற்கு அப்பாலான பகுதிகளிலும் மனிதாபிமான மோதல்கள் நீண்டுச் செல்கின்றன. மூன்று மாதங்களுக்கும் மேலாக பாலஸ்தீன சிவில் மக்கள் கடுமையான துயரங்களையும் இழப்புக்களையும் சந்தித்துவருவதோடு, வலயத்தின் பாதுகாப்பு மற்றும்நிலைத்தன்மைஎன்பனவும்கேள்விக்குரியாகியுள்ளன.

இதுவரையிலும் அணிசேரா நாடுகளின் அமைப்பு அமைதி காத்தது. காஸா எல்லைகள் அழிவடையும் வேளையில் நாம் எவ்வாறு அமைதிகாப்பது? அந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்படவில்லை என்பதை போலவே அங்கு அதிகளவான அப்பாவி சிவில் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அமைதி காப்பதால் நாமும் அதற்கு இணக்கம் தெரிவிப்பதை போல் உள்ளது.

உகண்டாவின் தலைமையில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் 19 ஆவது மாநாட்டின் ஊடாக காஸா பகுதிகளின் பிரச்சினைகள் தொடர்பிலும் பாலஸ்தின மக்களின் சுய நிர்ணய உரிமை மற்றும் சுயாதீனமானதும், சுதந்திரம ானமான உரிமைகளை பறிக்க முடியாது என்ற விடயத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளமை வரவேற்புக்குரியது.

காஸா பகுதிகள் தொடர்பில் தென் ஆபிரிக்கா கொண்டுள்ள உறுதியான நிலைப்பாட்டையும் நாம் வரவேற்க வேண்டும். விரைவில் மனிதாபிமான போர் நிறுத்தத்தையும், பணயக் கைதிகளை விடுவிக்கும் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும்எனசர்வதேசசமூகம்வலியுறுத்தியுள்ளது. இஸ்ரேல் அல்லாத தனி இராச்சியத்துக்குள் இரு இராச்சியங்களுக்கு தீர்வை தேட முடியாது. பாலஸ்தீனம் இல்லாமல் எந்த தீர்வையும் பெற்றுக்கொள்ள முடியாது.

ஐக்கிய நாடுகள் சபைக்குள் காணப்படும் யோசனைகள் மற்றும் இந்த மாநாட்டின் முன்மொழிவுகளுக்கு அமைய, மே ற்குக் கரை, காஸா பகுதி மற்றும் கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகள் பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். மேலும், காஸா பகுதியின் இன அமைப்பு ம ாறக்கூடாது. ஐந்து வருடங்களுக்குள் பாலஸ்தீன அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்

நாம் இப்போது பனிப்போரின் பின்னரான நிலைமை களின் இறுதி நிலை மற்றும் மாற்றம் கண்டு வரும் பல்முனை உலகின் அணுகுமுறைகளை காண்கிறோம். புவிசார் அரசியல் முன்னணியில், முன்னைய பலவான்கள் மற்றும் பலவான்கள் என்ற அந்தஸ்த்தை தக்கைக்கும் நோக்கில் செயற்படும்தரப்பினர்களுக்கு மத்தியில் மறைமுகமான மற்றும் வெளிப்படையான மோதல்கள் மீண்டும் வெடிப்பதையும் நாம் காண்கிறோம். ஐரோப்பாவின் அட்லாண்டிக் சமுத்திரத்தின் இராணுவக் கூட்டணி வலுப்பெற்றுள்ளது. ஆயுதக் கட்டுப்பாட்டு தொடர்பிலான கடந்த கால ஒப்பந்தங்கள் முறிந்துள்ளன.

இராணுவச்செலவு வரலாற்றில் முன்னர் இல்லாத அளவை எட்டியுள்ளது. மேலும், அணு ஆயுதங்கள் குறித்து மீண்டும் பாரிய அளவில் கொள்கை ரீதியிலான கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டும். இந்து மற்றும் பசுபிக் சமுத்திரங்களின், நம்மைச் சுற்றியுள்ள பகுதிகள் உட்பட பிராந்தியத்தில் ஒரு புவிசார்-மூலோபாய போட்டி உருவாகி வருகிறது. மேலும், விண்வெளி மற்றும் சமுத்திரங்கள் மோதலுக்கு சாத்திய மான தளங்களாக மாறிவிட்டன.

பிரதான சக்திகளுக்கு இடையிலான மூலோபாய போட்டியின் காரணமாக கொள்கை அடிப்படையிலான வர்த்தக பாதுகாப்புவாதத்தின் எழுச்சியால் சுதந்திர வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்பு பின்னடைவை நோக்கி நகர்கிறது. பிரிந்து செல்லல் மற்றும் இடர்பாடுகளை மட்டுப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களினால் இந்த நிலைமை மேலும் விரிவடைந்துள்ளது.

புதிய வர்த்தக முறை குறித்த ஒருதலைப்பட்சமான அறிவிப்பு, உலக வர்த்தக அமைப்பின் பன்முகத்தன்மை யை மேற்கத்திய நாடுகளால் புறக்கணிக்கப்பட்டிருப்பதை காண்பிக்கிறது.

டொலர் ஒரு ஆயுதமாக மாறிவிட்டது. பொருளாதாரம் மற்றும் கடன் நெருக்கடி, காலநிலை நீதி, உணவு ம ற்றும் வலுசக்தி பாதுகாப்பு ஆகியவை புதிய சவால்களாக மாறியுள்ளன.

டிஜிட்டல் பிரிவினை மற்றும் பெரும் அழிவுக்கு வழிவகுக்கும் ஆயுதங்கள் வாயிலாக, அணிசேரா அமைப்பில் அங்கம் வகிக்கும் உலகின் வளர்ந்துவரும் நாடுகள் மற்றும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் மத்தியில் பெரும் சமநிலை அற்ற தன்மை உருவாகியுள்ளது.

'உலக சுபீட்சத்துக்காக ஒன்றிணைந்த ஒத்துழைப்புக்களை மேலும் பலப்படுத்திக்கொள்ளல்' என்ற இந்த மாநாட்டின் தொனிப்பொருள், நமது உலகின் இருதுருவங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை பிரதிபலிக்கிறது.

அதில் வெற்றிகாண வேண்டும் எனில், அனைவருக்கும ான சிறந்த உலகை கட்டியெழுப்புவதற்கான வலுவான மற்றும் ஒன்றுபட்ட அணிசேரா அமைப்பொன்று அவசி-யப்படுகிறது. இதைச் செய்ய, நாம் நம்மை மீள்கட்டமை த்துக்கொள்ள வேண்டும். அணிசேரா நாடுகளின் அமைப்பு இனியும் வலுவற்ற நாடுகளின் கூட்டாக இருக்காது.

சில ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அடைந்த விரைவான முன்னேற்றம் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் காரணமாக இது நிகழ்ந்துள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். 2050 ஆம் ஆண்டாகும்போது, உலகின் முதல் பத்துப்பொருளாதாரங்களில் பெரும்பான்மையானவை இந்த அமைப்பிற்குச் சொந்த மானவையாக இருக்கும்.

உலக விவகாரங்களில் தலைமை தாங்கக்கூடிய நாடுகள் நம்மிடையே உருவாகி வருவதையும் காணமுடிகிறது. அவர்கள் தலைமை தாங்க தயாராக இருக்க வேண்டும். ஒரு பாரிய சக்தியாக மாறுவதற்கு பழைய மற்றும் புதிய வலுவான சக்திகளுக்கு இடையே அரசியல், பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் இராணுவ புவிசார் மூலோபாய போட்டி ஏற்படும் போது நாம் நிறைவேற்ற வேண்டிய பணிகள் இருக்கின்றன.

அணிசேரா அமைப்பு உங்கள் தலைமையின் கீழ் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும். மேலும், பல்முனை உலகில் தென் துருவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளின் மிகப்பெரிய கூட்டாக அணிசேரா நாடுகளின் அமைப்பை மாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதற்கு நாம் நமது இலக்குகளை மறுசீரமைக்க வேண்டும். வளர்ந்து வரும் பல்முனை உலகில் 'பெண்டுங்' கொள்கைகளைப் பாதுகாப்பதோடு, செல்வந்த நாடுகளின் மோதல்களுக்குள் தலையீடு செய்யாத நாடுகளை உள்ளீர்ப்பதற்கான அழுத்தங்களை எதிர்த்தல், தென் துருவ நாடுகளின் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் காலநிலை மாற்றம் தணிப்பு குறித்த அபிலாகைளை உள்ளடக்கிய பல்முனை உலகத்தை உருவாக்குதல் மற்றும் அணிசேரா நாடுகளின் தென் துருவ மற்றும் நட்பு நாடுகள் செயற்திறன்மிக்க கூட்டாக மாற்றுவதற்கு நாம் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

அதேபோன்று, தென் துருவம் எதிர்கொள்ளும் சமகால சவால்களை சமாளிக்கும் திறன் கொண்ட நிரந்தர செயல் பாட்டுக் கட்டமைப்பை நிறுவுவதற்கு நாங்கள் பணியாற்ற வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன். மேலும், இந்த புதிய ஒழுங்கை வடிவமைக்கும் திறன் கொண்ட அமைப்பாக நாங்கள் மாற வேண்டும்.

மது எதிர்காலம் நம் கையில் உள்ளது. அதை உருவாக்கும் அல்லது அழிக்கும் திறனும் நம்மிடமே உள்ளது. அதனை நாம் செய்வோம். அணிசேரா அமைப்பின் 19 ஆவது அரச தலைவர்கள் அமர்வை வெற்றிகரமாக ஏற்பாடு செய்ததற்காக உகண்டாஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்து எனது உரையை நிறைவு செய்கின்றேன்.' என்றார்.

# நேபாள பிரதமருடனும் ரணில் பேச்சு

அணிசேரா நாடுகளின் 19ஆவது மாநாட்டுக்கு இணையாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் நேபாள பிரதமர் புஷ்ப கமல் டஹாலுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு உகண்டாவின் கம்பாலா நகரில் நேற்று இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவும் கலாசார மற்றும் மத உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்துதலைவர்கள்கலந்துரையாடியதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான சுற்று லாத்துறையை மேம்படுத்த இது உதவும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், இரு நாடுகளுக்கு இடையே-யான அரசியல் உறவை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், பரிமாற்றத் திட்டத்தின் அடிப்படையில், இரு நாட்டு பாராளுமன்ற விவகாரங்களை ஆய்வு செய்வதற்கு இரு நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்பளிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெயசங்கர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தி த்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பு குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் எக்ஸ் தளத்தில் பதிவொன்றையும் இட்டிருந்தார். அந்தப் பதி வில் 'கம்பாலா நகரில் நடந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டில் பங்கேற்ற இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தி த்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொடர்ச்சியான வழிகாட்டுதல் பாராட்டத்தக்கது. அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கான இந்தியாவின் அர்ப்பணிப்பை 'சாகர்' கொள்கை பிரதிபலிக்கிறது.' என்று குறிப்பிட்டிருந்தார்.




யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்ச்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
NCI
CCIY
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
UNITY IS STRENGHT
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILE zone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# வடக்கு கிழக்கு இணைப்பு, சுயாட்சியை பெறுவதற்காக தலைவராகி உழைப்பேன்

## சிறீதரன் எம்.பி. கட்சியினருக்கு அறிவிப்பு



அரசமைப்பு ரீதியாக வடக்கு - கிழக்கு இணைப்பு, சுயாட்சி அதிகாரங்கள், மத்திய அரசில் ஒரு தேசமாகப் பங்குபற்றுவதற்கான பொறிமுறை, அதிகாரங்களுக்கான பாதுகாப்பு என்பன ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். இது தொடர்பாக சிங்கள தேசத்திற்கும் தமிழ்த் தேசத்திற்கும் இடையே சமூக ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவேண்டும். அதனடிப்படையிலான இலக்குகளை நோக்கியதாகவே எனது பயணம் அமையும் என்பதை தங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கான வேட்பாளருமாகிய சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைமைக்கான தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ள கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்களை நோக்கி, ஈழத்தமிழர்களின் இருப்பை உறுதிசெய்வதற்கான முன்னகர்வுகள், கட்சியின் நிர்வாகக் கட்டமைப்பு சார்ந்த மேம்பாட்டுத் திட்டங்கள் என்னும் இருநிலைப்பட்டுஅவரால்முன்வைக்கப்பட்டுள்ளசெயல்நோக்கு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை என்பது தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பதையும், தமிழர் தேசத்தைத் தாங்கும் தூண்களாக உள்ள நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் என்பவையும் அழிக்க எடுக்கப்படும் நடவடிக்கையே! இலங்கைத்தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியது என சிங்கள மக்கள் கருதுவதாலேயே இவ் அழிப்பு இடம்பெறுகிறது. சிங்கள-பௌத்தசித்தாந்தமும், ஒற்றையாட்சிக் கட்டமைப்பும் அதற்கான அரச இயந்திரமும், இவ்வழிப்பு நடவடிக்கைகளில் பங்காற்றுகின்றன. இந்நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு இவ்வழிப்பிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும். இதற்கு கோட்பாட்டு அடிப்படையில் தேசம், இறைமை, சுயநிர்ணயம் என்பன ஏற்றுக் கொள்ளப்படல்வேண்டும்.

அரசமைப்பு ரீதியாக வடக்கு - கிழக்கு இணைப்பு, சுயாட்சி அதிகாரங்கள், மத்திய அரசில் ஒரு தேசமாகப் பங்குபற்றுவதற்கான பொறிமுறை, அதிகாரங்களுக்கான பாதுகாப்பு என்பன ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். இது தொடர்பாக சிங்கள தேசத்திற்கும் தமிழ்த் தேசத்திற்கும் இடையே சமூக ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவேண்டும். அதனடிப்படையில்கீழ்வரும்இலக்குகளை நோக்கியதாகவே எனது பயணம் அமையும் என்பதை தங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

» படைச்சக்திகள்-தாயகமக்களும் அதன் நீட்சியாகவுள்ள புலம்பெயர் உறவுகளும்.

» சேமிப்புச் சக்திகள் - மலையக மக்கள், தமிழக மக்கள் உட்பட உலகவாழ் தமிழ் மக்கள்.

» நட்புச் சக்திகள் - சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட உலகம் வாழ் முற்போக்கு ஜனநாயகச் சக்திகள்.

» மக்கள் பங்கேற்பு அரசியலை வலுப்படுத்தல்.

» சர்வதேச சமூகத்தை எமக்குச் சார்பாகத் திரட்டுதல்.

» ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு சர்வதேசப் பாதுகாப்புடன் கூடிய இடைக்கால நிர்வாகத்திற்கு அழுத்தம் கொடுத்தல்.

» தமிழ் மக்களுக்கென அதிகார மையம் ஒன்றைக் கட்டியெழுப்புதல்.

» கிழக்கைப்பாதுகாப்பதற்குதனியானவேலைத்திட்டத்தை முன்னெடுத்தல்.

» மீன்பிடி, விவசாயம், வணிகம், கைத்தொழில், அரசு, நிர்வாகம், கல்வி போன்ற துறைகளுக்கு துறைசார் நிபுணர்கள், அனுபவசாலிகள், ஆற்றலாளர்களை உள்ளடக்கிய சிந்தனை வங்கிகளை உருவாக்கி சூழலுக்கேற்ற தீர்மானங்களை நிறைவேற்றுதலும் செயற்படுத்துதலும்.

» பலமுனைகளிலும், கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கும் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப்பகுதிகளில்இன, மத, கலாசார, பண்பாட்டு ரீதியாக வலிந்து மேற் கொள்ளப்படும் சகல ஆக்கிரமிப்புகளையும் - துறைசார் அடக்கு முறைகளையும் பதிவுசெய்து, உடனடி எதிர்ப்புப் பொறி முறைகளைக் கையாளக்கூடிய 'மக்கள் குறைகேள் சர்வதேச கண்காணிப்பு மையங்களை' வடக்கிலும் கிழக்கிலும் தனித்தனியேநிறுவுதல்.

» தமிழினத்தின் கலாசார, பண்பாட்டு மரபுரிமைகளையும், அடையாளங்களையும் நிபுணத்துவ பங்குபற்றலுடன்நிறுவி, நெறிப்படுத்தல்.

» ஈழத்த மிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் தேசங்களில் உள்ள சமூக அமைப்புகளின் தாயகம் நோக்கிய செயற்பாடுகளுக்கு வழிவகை செய்தல்.

» கட்சியின் நிர்வாகக் கட்டமைப்பு சார்ந்த மேம்பாட்டுத் திட்டங்கள்.

» தொண்டரிலிருந்து தலைமை வரை கட்டிறுக்கமான நிர்வாக நடைமுறைகளையும், உட்கட்சி சனநாயகத்தையும் வலுவுள்ளதாக்கும் வகையில் கட்சியின் யாப்பு விதிகளை நேர்த்தியாக்குதல்.

» கட்சியின் இலக்குக் குறித்த தெளிவும் வினைத்திறனும் மிக்க நவீன ஊடகப்பரப்பைக் கட்டமைத்தல்.

» கட்சியின் தலைமைப் பணிமனை, மாவட்டப் பணிமனை என்பவற்றை முறையான கட்டமைப்புகளுடன் இயங்கு நிலையில் வைத்திருத்தல்

» கட்சிக்கான சட்டரீதியான நிதியீட்டங்களை உறுதிப்படுத்தலும் கையாளலும்.

» தமிழ்த்தேசியக் கொள்கை நிலைப்பாட்டோடு இயங்கும் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் கொள்கைவழிப்பட்ட அரசியல்உறவுநிலையைப்பேணுதல். மாற்றுக்கருத்துகளுக்கு மதிப்பளித்தல்.

» அரசுடனும் ஏனைய அமைப்புக்களுடனுமான பேச்சுவார்த்தைகளின் போது வெளிப்படைத் தன்மையைப் பேணுதல்.

» கட்சியின் நிர்வாகக் கட்டமைப்பில் இளையோர்களை உட்சேர்த்தல்.

» முன்னாள் போராளிகளினுடைய அரசியல் மற்றும் தேசக்கட்டுமான அனுபவங்களை உள்வாங்கி, கட்;சியின் நகர்வுகளில்அவர்களின்பங்கேற்பினையும்உறுதிப்படுத்துதல்.

» எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சி எதிர்கொள்ளும் ஒவ்வொரு தேர்தல்களிலும் தனிநபர்களின் சுயவிருப்புக்கேற்ப வேட்பாளர்களைநியமிக்காது, பொருத்தமானவேட்பாளர்களை நிறுத்துவதற்காக வெளிப்படையாகச் செயற்படல்.

» நிலத்தி லும், புலத்திலும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளையும் இலக்குகளையும் அடைவதற்கான பொது வேலைத்திட்டத்திற்குரிய பொறிமுறையை உருவாக்கி நடைமுறைப்படுத்தல். - என்றுள்ளது.

# பள்ளமடு விபத்தில் குடும்பஸ்தர் இறப்பு

## மேலும் ஒருவர் காயம்

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, பள்ளமடு பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் ஒருவர் படுகாயமடைந்தார்.

விபத்தைத் தொடர்ந்து அந்த இடத்தில் கூடியபொதுமக்களுக்கும்பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. விபத்தில் தொடர்புபட்ட பேருந்தை அங்கிருந்து எடுத்துச் செல்ல பொலிஸார் முயன்றதை அடுத்து இந்த முரண்பாடு ஏற்பட்டது.

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, பள்ளமடு வைத்தியசாலையில் இல் இருந்து சற்று தொலைவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. மன்னார் - யாழ் பிரதான வீதியூடாக பயணித்த சிறிய ரக பேருந்து துவிச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது என்று சாட்சிகள் தெரிவித்தனர்.

சம்பவத்தில் கோயில் குளம் பகுதியை சேர்ந்த 42 வயதுடைய குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அதே கிராமத்தைச் சேர்ந்த 45 வயதுடைய மற்றொரு குடும்பஸ்தர் படுகாயமடைந்து முழங்காவில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.



காலைக்கதிர் Kalaikkathir

# பெனின் நாட்டு உப அதிபருடன் ரணில் நேரில் சந்தித்துப் பேச்சு



அணிசேரா நாடுகளின் மாநாட்டுக்கு இணைந்த வகையில் உகண்டாவின் கம்பாலா நகரில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் பெனின் குடியரசின் உப ஜனாதிபதி மாரியம் சாபி தலதாவிற்கும் இடையில் இருதரப்பு பேச்சு இடம்பெற்றது.

இலங்கைக்கும் பெனின் குடியரசுக்கும் இடையில் 2012 இல் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டதுடன் இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேலும் விரிவுபடுத்துவது குறித்து தலைவர்கள் கலந்துரையாடினர்.

மேலும், பருத்தி ஏற்றுமதியில் முன்னணியில் உள்ள பெனின் குடியரசு, பருத்தித் தொழிலில் முதலீடு செய்வதற்கான இலங்கையின் ஆடைத் துறைக்கான வாய்ப்புகளை சுட்டிக்காட்டிய பெனின் உப ஜனாதிபதி, அதற்காக இலங்கை முதலீட்டாளர்களை பரிந்துரைக்குமாறு ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார்.

இராஜதந்திர, உத்தியோகபூர்வ மற்றும் சேவை கடவுச்சீட்டுகளை வைத்திருப்பவர்களுக்கு விசா விலக்கு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கைக்கும் பெனின் குடியரசுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

இரு நாடுகளின் இராஜதந்திர, உத்தியோகபூர்வ மற்றும் சேவை கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் முன் விசா பெறாமலேயே முப்பது (30) நாட்கள் வரை நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கும் தங்கியிருப்பதற்கும் இந்த ஒப்பந்தம் மூலம் வசதிகள் வழங்கப்படுகின்றன.

இலங்கைக்கான வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மற்றும் பெனின் குடியரசு சார்பாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இலங்கை - பெனின் இடையிலான இருதரப்பு உறவுகளை புதிய பரிமாணத்திற்கு கொண்டுவருவதன் மூலம் இருநாடுகளுக்கும் இடையில் உருவாக்கப்படக்கூடிய புதிய பொருளாதார வாய்ப்புகளை ஆராய்வதற்காக விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பெனின் வெளிவிவகார அமைச்சருக்கு அழைப்பு விடுத்தார்.

இதேவேளை, அணிசேரா நாடுகளின் மாநாட்டுக்கு இணைந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் எத்தியோப்பிய பிரதமர் அபி அஹமட்க்கும் இடையிலான சந்திப்பொன்றும் நேற்று இடம்பெற்றது.

இலங்கையின் விரைவான பொருளாதார மீட்சிக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கிய தலைமைத்துவதற்கு வாழ்த்து தெரிவித்த எத்தியோப்பிய பிரதமர், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, விவசாயம் மற்றும் ஆடைத் தொழில்துறை உள்ளிட்ட இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதுடன் புதிய முதலீட்டு வாய்ப்புக்களை ஆராய்வது குறித்தும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினார்.

# பெக்கோ பாதை திட்ட முன்னேற்ற ஆய்வு

## சாகல தலைமையில் கூட்டம்

இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பெக்கோ பாதை (Pekoe trail) திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

பொக்கோ பாதை திட்டத்தின் கீழ், சுமார் 300 கிலோ மீற்றர் தூரத்திற்கு சுற்றுலாப் பாதை உருவாக்க எதிர்பார்க்கப்படுவதாகவும், இத்திட்டம் உலகளவில் பெரும் புகழைப் பெற்றுள்ளதாகவும், இலங்கையின் தேயிலை தொழில்துறையின் வளர்ச்சிக்கு இது பெரும் உறுதுணையாக அமையும் எனவும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட பொக்கோ பாதைத் திட்டக் குழு விளக்கமளித்தது.

இலங்கையை இதுவரை சுற்றுலாத் தலமாகக் கருதாத சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு இத்திட்டம் உதவும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இங்கு உரையாற்றிய சாகல ரத்நாயக்க, இலங்கைக்கு மிகவும் முக்கிய திட்டமான இந்த திட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விசேட கவனம் செலுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

எனவே இத்திட்டத்தை அமுல்படுத்தும் போது ஏற்பட்டுள்ள சட்ட மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி தீர்வு காண வேண்டும் எனவும் இத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமானது எனவும் சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

அதற்கிணங்க, இத்திட்டம் தொடர்பில் பிரதேச தோட்டக் கம்பனிகள் மற்றும் ஏனைய துறைசார் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி விரைவான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சாகல ரத்நாயக்க உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

# தெந்கு நாடுகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி ரணில் கலந்துரையாடல்

உகண்டாவின் கம்பாலா நகரில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் மாநாட்டுக்கு இணைந்த வகையில் ஆபிரிக்க பிராந்தியத்தில் உள்ள உலகளாவிய தெற்கு நாடுகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசாவிற்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தென்னாபிரிக்க ஜனாதிபதி மிகவும் அன்புடன் வரவேற்றதுடன் இரு நாட்டுத் தலைவர்களும் இருதரப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதேவேளை, தன்சானியா பிரதமர் காசிம் மஜலிவாவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து இருதரப்பு பேச்சுக்களில் ஈடுபட்டார்.

மேலும், பஹமாஸ் பிரதமர் பிலிப் ஈ. டேவிஸ், எத்தியோப்பியா பிரதமர் அபே அஹமட் , பெனின் குடியரசின் உப ஜனாதிபதி மாரியம் சாபி தலதா, ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்து, இருதரப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான கிங்ஸ் நெல்சன், நிமல் பியதிஸ்ஸ, குமாரசிறி ரத்நாயக்க, உதயகாந்த குணதிலக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன ஆகியோரும் இச்சந்திப்புக்களின் போது உடனிருந்தனர்.



# ஊரெழுவில் கசிப்புக் குகை இளைஞர்களால் முற்றுகை

## சந்தேகநபர்கள் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம் ஊரெழு கிராமத்தில் கசிப்பு குகை ஒன்று இளைஞர்களால் நேற்று முற்றுகையிடப்பட்டது.

அங்கு கசிப்புக் காய்ச்சிக் கொண்டிருந்தவர்கள் தப்பி சென்ற நிலையில் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய பொருட்களும் ஒரு தொகுதி கசிப்பும் இளைஞர்களால் கைப்பற்றப்பட்டது.

ஊரெழு கிராமத்தில் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கிராம இளைஞர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்பு குழுவொன்று கோப்பாய் பொலிஸாரின் ஒழுங்கமைப்பில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சிவில் பாதுகாப்பு குழு தலைவர் சின்னத்துரை முகுந்தன் தலைமையில் சென்றவர்களே அதிரடியாக இந்தச் சுற்றி வளைப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது கைவிடப்பட்ட தோட்டம் ஒன்றில் இருந்து கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் பொருட்களும் தென்னைமரத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி கசிப்பும் சிவில் பாதுகாப்புக் குழுவால் கைப்பற்றப்பட்டன.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு கோப்பாய் பொலிஸார் வரவழைக்கப்பட்டு அவர்களிடம் கைப்பற்றப்பட்ட கசிப்பு உற்பத்திப்பொருட்கள் கையளிக்கப்பட்டன. மேலும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை கோப்பாய் பொலிசார் முன்னெடுத்துள்ளனர்.

# அம்பாந்தோட்டை கடலில் மூழ்கி 27 வயது இளைஞர் உயிரிழப்பு

அம்பாந்தோட்டைக் கடலில் மூழ்கி இளைஞர் உயிரிழந்தார். கொழும்பு, கொள்ளுப்பிட்டியைச் சேர்ந்த சுஜீவ பிரியலால் (வயது 27) என்ற நபரே உயிரிழந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நண்பர்களுடன் அம்பாந்தோட்டைக் கடலில் குளித்துக்கொண்டிருந்தபோது அலையால் இழுத்துச்செல்லப்பட்டு நீரில் மூழ்கிச் உயிரிழந்தார். அவரது சடலம் இன்று மாலை மீட்கப்பட்டு உடற்கூறாய்வுகளுக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த இளைஞருடன் கடலில் குளித்த ஏனைய 4 இளைஞர்களும் ஆபத்து எதுவுமின்றி மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## குறுக்கே பாய்ந்தோடிய நாயால்

# விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் சிகிச்சை பயனிற்றி நேற்று சாவு



வீதியின் குறுக்கே பாய்ந்த நாயால் விபத்துக்குள்ளாகிக் காயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

சாவகச்சேரி நாவற்குழி பகுதியைச் சேர்ந்த 35 வயதான இரண்டு வயது பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நாவற்குழி -செம்மணி வீதியூடாக மோட்டார் சைக்கிளில் குடும்பத்துடன் அவர் பயணித்துக்கொண்டிருந்தபோது திடீரென நாய் குறுக்கே பாய்ந்ததால் நிலைதடுமாறு விபத்தில் சிக்கினர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த அனைவரும் காயமடைந்தனர். மனைவி மற்றும் இரண்டு வயது ஆண் குழந்தை ஆகியோர் சிறு காயங்களுடன் உயிர் தப்ப, படுகாயமடைந்த குடும்பஸ்தர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பயனின்றி நேற்று அவர் உயிரிழந்தார்.

JITF 2024
14th JAFFNA INTERNATIONAL TRADE FAIR

14வது யாழ் சர்வதேச
வர்த்தக கண்காட்சி - 2024

SOORYA
ESTD 1984

விசேட
விலைக்கழிவு



மேலும் பலவற்றிற்கு
எங்கள் டோம் 2 ஸ்டால்
எண் 13 மற்றும் 51 ஐப்
பார்வையிடுங்கள்.



~~ரூ. 2,890/-~~
ரூ. 1,800/-
சாம்பிராணி 25 பைகள் + சந்தன ஊதுபத்திகள்
ஊதுபத்திகள் + ஒரு டஜன் தீப்பெட்டி
சூர்யா குடை இலவசம்.



~~ரூ. 5,400/-~~
ரூ. 4,700/-
சாம்பிராணி 25 பைகள் + 12 சந்தன ஊதுபத்திகள்
1 மூலிகை ஈ விரட்டி திரவம் + 1 மெழுகுதிரி
சூர்யா குடை இலவசம்.



~~ரூ. 1,750/-~~
ரூ. 1,200/-
சந்தனம் + றோஸ் + அன்னாசி + மல்லிகை + மந்திரா + சுகந்தா
சம்பிராதய +சான்ட் 4 வகை + சாம்பிராணி + டஜன் தீப்பெட்டி
மேலுள்ள அனைத்து பொருட்களும் ஒவ்வொன்று

150 Megawatts

Hayleys Solar



நீங்கள் எங்கள்
கரங்களில் பாதுகாப்பாக உள்ளீர்கள்

தீவின் நம்பகமான
சோலார் நிபுணர்களின் ஆதரவு

சோலார் மூலம் மின்சார கட்டணங்கள் சேமிப்பு

| வகை | Single Phase | | Three Phase | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Inverter கொள்ளவு (kW) | 3 | 5 | 5 | 6 | 8 | 10 | 15 | 20 | 30 | 40 |
| சராசரி மாதாந்த அலகுகள் (kWh) | 342 | 570 | 570 | 752 | 940 | 1,191 | 1,755 | 2,382 | 3,511 | 4,765 |
| ஒரு மாதத்திற்கான பில் மதிப்பு (Rs) | 23,238 | 43,530 | 43,530 | 59,728 | 76,460 | 98,799 | 148,995 | 204,798 | 416,885 | 416,885 |
| திருப்பிச் செலுத்தும் காலம் (ஆண்டுகள்) | 3.8 | 2.9 | 3.4 | 2.9 | 2.7 | 2.5 | 1.9 | 1.9 | 1.9 | 1.6 |
| வரி உள்ளடங்கலாக | 1,051,380 | 1,492,700 | 1,752,300 | 2,044,350 | 2,446,730 | 2,926,990 | 3,485,130 | 4,655,100 | 6,785,000 | 7,965,000 |

நாடுமுழுவதுமான விற்பனை மற்றும் தொழினுட்ப உதவி
போதுமான அளவு இருப்பு இப்பொழுது கிடைக்கும்
மாதாந்த கட்டுப்பணம் ரூபா. 10,000 இலும் குறைவு
தொந்தரவு இல்லாத உடனடி மாற்று உத்தரவாதம்

SLSEA REGISTERED SOLAR (PV) SERVICE PROVIDER-SLSEA/S0027

Hayleys Fentons Since 1919
ENGINEERING EXCELLENCE FOR OVER 100 YEARS
SINGER
0112 102 102
www.hayleyssolar.com

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.01.2024இல் வெளியிடப்பெற்றது.